விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 22 புதன்கிழமை (08.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 294

## குண்டுத் தாக்குதல்களை நிறுத்த இராணுவத்துக்கு அரசு உத்தரவு!

(கொழும்பு)

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் குண்டுத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு இராணுவத்துக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய அரசின் எதிர்ப்பலைகள் வெளியானதையடுத்தே இம்முடிபுக்கு அரசு வந்துள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை மோதலில் பாதிக்கப்படும் மக்கள் தொடர்பான இந்திய கரிசினை குறித்து கருத்து வெளியிட்ட இலங்கை வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாகம, இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான உதவிகளை இலங்கை அரசு உரிய வகையில் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இந்திய தேசிய பாதுகாப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் நியமனத்துக்கு எதிராக ஜே.வி.பி. இன்று உயர் நீதிமன்றில் மனு

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தலைவர் கருணா அம்மான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜே.வி.பி. நேற்று உயர் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் வசந்த சமரசிங்கவின் வெற்றிடத்திற்கு கருணா அம்மான் நியமிக்கப்பட்டிருப்பது சட்டத்திற்கு முரண்ானதெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவினால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, சிறிலங்கா சுதந் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசு ஒத்துழைத்தால் தமிழ் மக்களுக்கு வாழ்வுண்டு


## அவசரகாலச் சட்டம் ஒரு மாதத்துக்கு நீடிப்பு

அவசரகாலச் சட்டம் 84 மேலதிக வாக்குகளால் மேலும் ஒருமாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இந்தப்பிரேரணைக்கு ஆதரவாக 98 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் அளிக்கப்பட்டன. வாக்களிப்பின்போது ஐ.தே.கட்சி, ஜே.வி.பி. ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை. இதேவேளை, ஐ.ம.சு. முன்னணியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட முரளிதரன் (கருணா) அரசுடன் இணைந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

## கலைஞர் கருணாநிதி உரை

(சென்னை)

இந்திய அரசு ஒத்துழைத்தால் தமிழர்கள் நாம் வெற்றி பெறுவோம். அவர்கள் ஒத்துழைக்காவிட்டால் இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்ல; தமிழகத்திலுள்ள தமிழர்களும் அடியோடு சாவோமென தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்த இலங்கைப் பிரதமருடன் பேச வேண்டும்

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்த அந்நாட்டுப் பிரதமருடன் நம்முடைய பிரதமர் மன்மோகன் சிங் பேசி தீர்வு காண வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா வலியுறுத்தியுள்ளார்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் கொள்கையில் மாற்றம் தேவை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சென்னையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா நேற்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் விபரம் வருமாறு,

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட

❖ க.பொ.த. (உ/த) பரீட்சை உயிரியல்

(பாட அலகு ரீதியான விளக்கம்)

## வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவேன்

### கன்னி உரையில் முரளிதரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த 22 வருடங்களாக பாதிக்கப்பட்டிருக்கும் எமது வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் சிதைந்த வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்புவதற்காக எனக்கு வழங்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பயன்படுத்தி சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரையில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர (12 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் மீது கிளைமோர் தாக்குதல் பெண் மரணம்; 12 பேர் காயம்

வவுனியா ஓமந்தைக்கு வடக்கே புளியங்குளம் பகுதியில் நேற்று பகல் 12.10 மணியளவில் பஸ் வண்டியொன்றின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 12 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் முல்லைத்தீவு பிராந்திய பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஒஸ்மான் சாள்ஸ் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்தில் மரணமடைந்த பெண் அடையாளம் காணப்படவில்லை.

கிளிநொச்சியில் இருந்து புளியங்குளத்தை நோக்கி நேற்றுக் காலை 7 மணிக்கு புறப்பட்டு புதுக் குடியிருப்பு வழியாகச் சென்ற பஸ் வண்டியே புளியங்குளம் பகுதியில் கிளைமோர்க் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## வவுனியாவில் நேற்று இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

வவுனியா சிதம்பரபுரத்திலும் ஆசிகுளம் வீதி, கல்நாட்டினகுளம் சந்தியிலும் நேற்றுக் காலை இரண்டு இளைஞர்களின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கைகளும் கண்களும் கட்டப்பட்ட நிலையில் இந்தச் சடலங்கள் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள இந்தச் சடலங்கள் இரண்டும் அடையாளம் காணப்படவில்லை.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் வெள்ளைவான் ஒன்றில் இந்த இளைஞர்கள் கொண்டு வரப்பட்டு, சம்பவ இடத்தில் வைத்து இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதாகப் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பிரி.நாடாளுமன்றுக்கு வெளியே தமிழர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

(லண்டன்)

தமிழ்மக்கள் மீது இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் விமானத் தாக்குதலுக்கெதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு வெளியே புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று முன் தினம் மாலை 4 மணி முதல் இரவு 7 மணிவரை நடைபெற்றுள்ளது. பிரித்தானிய தமிழர் பேரவை ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணி குறித்து குறுகிய கால அறிவிப்பே விடுக்கப்பட்டிருந்த போதும் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் அதில் பங்கெடுத்திருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை விமானப் படையினர் மேற்கொண்டு வரும் விமானத் தாக்குதல் காரணமாக வன்னியில் 2 இலட்சத்து 30 ஆயிரம் தமிழர்கள் இடம்பெயர்ந்திருப்பதாகவும் தமது நாட்டு மக்களுக்கு எதிராக அரசாங்கம் நடத்தி வரும் தாக்குதல்கள் மற்றும் பெரும் எண்ணிக்கையிலான இடப்பெயர்வு என்பன தம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாகவும் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் பிரித்தானியா இராஜதந்திர ரீதியான உதவிகளுடன் மாத்திரம் நிறுத்திக் கொள்ளாமல் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ்மக்களைப் பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் விமானக் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் தரை வழித் தாக்குதல்களைக் கண்டித்துக் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் இதேபோன்ற ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## 13 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

பப்புவா நியூக்கினியா நாட்டிற்குள் சட்டவிரோதமான முறையில் ஊடுருவ முற்பட்ட 13 இலங்கை அகதிகள் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

தொழில் வாய்ப்புக்களை வழங்குவதாகக் கூறி குறித்த இலங்கையர்கள் பப்புவா நியூக்கினியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பப்புவா நியூக்கினியாவிலுள்ள இரவு விடுதிகளிலும் கரையோரப் பிரதேசங்களிலிருந்தும் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இலங்கையர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து சிங்கப்பூர் மற்றும் கொங்கொங் ஊடாக இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

பப்புவா நியூக்கினியா நாட்டின் பணப் பெறுமதியில் 30 ஆயிரம் கினா செலுத்தி குறித்த இளைஞர்கள் அங்கு தொழில் வாய்ப்புத் தேடிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## இனவாதக் கருத்தை யார் கூறினாலும் தட்டிக் கேட்கும் உரிமை எமக்குண்டு

### ஹக்கீம் சபையில் உரை

(கொழும்பு)

சிறுபான்மையினரைப் புண்படுத்துகின்ற வகையில் வெளியிடப்படுகின்ற இனவாதக் கருத்துக்கள் குறித்து இராணுவத் தளபதி அல்ல, அவரது தகப்பனாக இருந்தாலும் தட்டிக் கேட்கக் கூடிய உரிமை எமக்கு உண்டு என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சபையில் தெரிவித்தார்.

யுத்தத்தின் ஊடாக சிங்களப் பேரினவாதத்தின் மேலாதிக்கத்தைத் திணித்துவிட எத்தனிக்கின்ற இவ்வேளையில் கருணா அம்மானின் நாடாளுமன்ற வருகையானது எதிர்காலத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்பதே இன்றுள்ள பிரச்சினையாகும் என்றும் அவர் கூறினார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே ரவூப் ஹக்கீம் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.இங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

புதிய எம்.பி சத்தியபிரமாணம் செய்திருக்கிறார். அவரது சத்திய பிரமாணத்தை எதிர்க்கட்சியினர் பகிஷ்கரித்தனர்.

மு.கா. என்ற வகையில் நான் பங்குபற்றியதுடன் முரளிதரனுக்கு வாழ்த்தும் தெரிவித்திருந்தேன். வித்தியாசமான களமுனைக்கு வந்துள்ள உங்களது வருகைக்கு வாழ்த்துக்கள் என்று தெரிவித்திருந்தேன்.

மிக உக்கிரமான வன்முறையை அடிப்படையாகக் கொண்ட அமைப்பிலிருந்து ஜனநாயக வழிக்கு கொண்டு வரப்பட்டுள்ள தன்மையானது புதுப்பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் அவரது வருகை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்பதை கட்டியம் கூறமுடியாது.

அவரது கட்சி இன்று கிழக்கில் ஆட்சியில் இருக்கின்றது. ஆயுதம் தாங்கிய குழுவில் இருந்த கருணா இப்போது எவ்வாறான பின்னணியை வைத்து வந்திருக்கிறார் என்று பார்க்க வேண்டும் என்றார். (ச)

## பேருந்து மீதான தாக்குதலுக்கு தமிழ்க் கூட்டமைப்புக் கண்டனம்

(கொழும்பு)

புதுக்குடியிருப்புக்கும் புளியங்குளத்திற்குமிடையில் சென்று கொண்டிருந்த பேருந்தின் மீது படையினரின் ஆழ ஊடுருவும் அணி நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் பொதுமக்கள் மூவர் படுகொலை செய்யப்பட்டு 6 பேர் படுகாயமடைந்த சம்பவத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதுக்குடியிருப்புக்கும் புளியங்குளத்துக்குமிடையில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகள் பேருந்தின் மீது இராணுவத்தின் ஆழ் ஊடுருவும் அணியினர் கிளைமோர்த் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. பொதுமக்களைப் படுகொலை செய்ய வேண்டும் என்ற நோக்கில் ஆழ ஊடுருவும் அணியினரால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் பேருந்தில் பயணம் செய்த மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஆறு பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வன்னியைக் கைப்பற்ற மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கையில் பெரும் பின்னடைவினைச் சந்தித்து வரும் படைகள் பொது மக்களை இலக்கு வைத்துப் படுகொலை செய்வதன் மூலம் மக்களை அச்சுறுத்தி வன்னியிலிருந்து வெளியேற்ற முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதல்களை அரசு உடன் நிறுத்த வேண்டும். இத் தாக்குதலினை அனைத்துலக சமூகம் கண்டிக்க வேண்டும் என்பதுடன் இவ்வாறான பயங்கரவாதத் தாக்குதல்களில் சிங்கள அரசு தொடர்ந்து ஈடுபடுவதை தடுப்பதனை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோருகின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஹொரவப்பொத்தானையில் நான்கு சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

ஹொரவப்பொத்தானை காட்டுப் பகுதியில் நான்கு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹொரவபொத்தானையிலிருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் விறகு சேகரிக்கச்சென்ற ஊர் மக்களினால் இந்தச் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. குறித்த சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சடலங்கள் கடத்தப்பட்டு காணாமல் போனவர்களதோ அல்லது கிராம மக்களினதாகவோ இருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-5)

## கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்

(பருத்தித்துறை)

கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நெல்லியடி வதிரிப் பகுதியில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நெல்லியடிப் பொலிஸாரினால் மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மூவரும் பருத்தித்துறைப் பதில் நீதிவான் பொ.குமாரசாமி முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட போது ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர்கள் மூவரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச-52)

## விடுதலைப் புலிகளின் 5 சடலங்கள் ஐ.சி.ஆர்.சியிடம் ஒப்படைக்கப்பட்டன

(வவுனியா)

வன்னி போர் முனைகளில் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து இராணுவத்தினரால் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த 4 சடலங்கள் உட்பட 5 விடுதலைப் புலிகளின் சடலங்கள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தனியார் பஸ்நிலையப் பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டுத் தாக்குதலை நடத்தியவரின் சடலமும் இந்த நான்கு சடலங்களுடன் சேர்ந்து சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவதற்காக இந்தச் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் உடனடியாகவே ஓமந்தை ஊடாக புளியங்குளம் பகுதிக்கு கொண்டு சென்றனர் என வவுனியா தகவல்கள் தெரிவித்தன. (ச)

## ஜானகவை எச்சரித்த றொகான் குணரட்ன

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் ஜானகபெரேரா குறிவைக்கப்படலாம் என சில நாள்களுக்கு முன்னர் றொகான் குணரட்ன எச்சரிக்கை விடுத்ததாக தலைநகர் கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சில நாள்களுக்கு முன்னர் சிங்கப்பூரில் இருந்து ஜானக பெரேராவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட றொகான் குணரட்ன, ஜானக பெரேராவினது உயிருக்கு விடுதலைப்புலிகளால் ஆபத்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜானக பெரேரா தனது பாதுகாப்பில் அக்கறை கொள்ளவில்லை. விடுதலைப்புலிகளுடன் மோதல்கள் நடைபெற்ற முன்னைய காலப் பகுதியில் இருந்து றொகான் குணரட்னவும் ஜானக பெரேராவும் நல்ல நண்பர்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


### மிருதங்க நாள் வகுப்பு ஆரம்பம்

09.10.2008 வியாழன் விஜய தசமி அன்று பிரத்தியேக மிருதங்க வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆசிரியர் :- N. மதிரூபன் (Dip in Mirudangam, Dip in Edu.)

தொடர்பு:-

| 193, அரசடி றோட், கந்தர்மடம். பி.ப. 3 மணி (தொ.பே. 021 222 2699) | 456, நாவலர் றோட், யாழ்ப்பாணம். பி.ப. 4 மணி (021 222 9403) |
|---|---|

(C-1639)

### யாழ்.மாநகரசபைக்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தார் ஏற்றி வருவதற்கான கேள்வி அறிவித்தல் - 2008

மாநகரசபைக்குத் தேவையான தார் பரல்களை இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்று கப்பல் மூலமாக யாழ்ப்பாணம் கொண்டு வந்து மாநகர சபைக் களஞ்சியத்தில் ஒப்படைப்பதற்கான சேவையாளர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் யாவும் மாநகர சபை ஆணையாளருக்குப் பதிவுத் தபால் மூலம் 15.10.2008 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

| விபரம் | ஒரு தார் பரலுக்கான ஏற்றி இறக்கல் கூலி உட்பட விலை |
|---|---|
| 1) 140 லீற்றர் கொண்ட தார் பரல் | - |
| 2) 180 லீற்றர் கொண்ட தார் பரல் | - |
| 3) 200 லீற்றர் கொண்ட தார் பரல் | - |

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம். (C-1637) திகதி 07.10.2008

# இன்று ஒரு தகவல்

## படிப்பும்-பண்பாடும்

ஒரு ஊரில் சோமநாதர் என்று ஒரு பெரியவர் இருந்தாராம். மிகவும் நல்லவர்.

அவரிடம் பணமும் அத்தோடு குணமும் சேர்ந்தே இருந்தது.

தர்மசிந்தனை உள்ளவர். நான்கு பேருக்கு நம்மால் முடிந்ததை செய்யவேண்டும் என்று நினைப்பவர்.

ஒருநாள் அவர் இரண்டு பண்டிதர்களைக் கூப்பிட்டு அவர்களைக் கௌரவிக்கவேண்டும் என்று நினைத்தார்.

ஒருவர் ஞானபண்டிதர். மற்றவர் ராமபண்டிதர். அவர்கள் இருவரையும் பார்த்து , வீட்டிற்கு வருமாறு அழைத்தார்.

அவர்களும் சரி என்று ஒத்துக்கொண்டனர். ஒருநாள் வந்து சேர்ந்தார்கள்.

இந்த பெரியவர் இருவரையும் அன்பாக வரவேற்று, உபச ரித்து விருந்துக்கு ஏற்பாடு செய்தார் .

அதற்குள் , அந்த இருவரில் ஒருவர் நான்போய் முதலில் குளித்துவிட்டு வருகிறேன் என்று புறப்பட்டார். அவர் போன பின்பு உட்கார்ந்திருந்த இன்னொருவரிடம் சோமநாதர் பேச்சுக் கொடுத்தார்.

“இப்ப குளிக்கப்போய்யிருக்கிறாரே உங்கள் கூட்டாளி ஞானபண்டிதர் .... அவர் பெரிய ‘வித்துவான்– தத்துவஞானி என்று ஊர்உலகம் எல்லாம் பேசுகிறார்களே !”என்றார்.

அவரைப்புகழ்ந்து பேசியது இவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை! ‘ ஊர்உலகத்திற்கு என்னதெரியும் அவரைப் பற்றி அவர் ஒரு பெரிய வித்துவான் என்று சொல்லும் அளவுக்கு அவரிடம் என்ன இருக்கிறது? எல்லாம் வெறும் வேஷம்! உண்மையைச் சொல்லப்போனால் அது ஒன்றும் தெரியாத மாடு !’என்று பொரிந்து தள்ளினார்.

அந்தப் பெரிய மனிஷன் இவர் இப்படிச் சொல்வார் என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை!

மனம் நொந்துபோய் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

கொஞ்ச நேரத்தில், குளிக்கப்போயிருந்த ஞானபண்டிதர் திரும்பிவந்தார். அவர்வந்ததும், ராமபண்டிதர் குளிக்கப் போனார். இவர் போனபின் –ஞானபண்டிதரிடம் பேச்சுக் கொடுத்தார் சோமநாதர்.

‘உங்கள் கூட்டாளி பெரிய ஞானிபோல இருக்கிறாரே !’ என்றார்.

இதைக்கேட்டதும் அவரது முகம் வாடிவிட்டது.

‘யார் ஞானி ? அவரா ? அவரைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது . அது ஒரு மோசமான கழுதை !’என்றார்.

இதைக்கேட்டதும், அந்தப் பெரிய மனிஷன் இன்னும் நொந்து போனார் . பதில் எதுவும் பேசாமல் இருந்தார். சாப்பாட்டு நேரம் வந்தது !

குளிக்கப்போயிருந்தவரும் வந்து சேர்ந்தார். அந்தப் பெரி யவர் இவர்கள் இருவரையும் கூட்டிக்கொண்டுபோய் உட் காரவைத்தார். அவர்கள் முன் இரண்டு தட்டை வைத்தார்.

ஒரு தட்டில் புல்லு .... ஒரு தட்டில் தவிடு ... கொண்டு வந்து வைத்தார்! இதைப்பார்த்தவுடன் அந்த பண்டிதர்களுக்கு கோபம் வந்துவிட்டது!

‘எங்களை என்ன மிருகம் என்று நினைத்துவிட்டீர்களா? எங்களை இப்படி அவமானப்படுத்துவதற்காகவா உங்கள் வீட்டிற்கு கூப்பிட்டீர்கள்?’ என்று சொல்லி சத்தம் போட ஆரம்பித்தனர்.

‘அய்யய்யோ .....அப்படி எல்லாம் நினைத்துவிடாதீர்கள் நீங்கள் இருவரும் பண்டிதமணிகள்.... உங்கள் வார்த்தைக்கு மரியாதை கொடுத்தேன்.... அவ்வளவுதான்! நீங்கள் தான் அவரை மாடு –என்றீர்கள் ! அவர்தான் உங்களை கழுதை – என்றார். மாடும் ,கழுதையும் என்ன சாப்பிடுமோ அதைத் தான் உங்கள் முன் வைத்தேன்! முதலில் நான் உங்களை பண்டிதர்கள் என்று நினைத்துத் தான் விருந்துக்கு ஏற்பாடு பண்ணினேன்.

நீங்கள் வந்தபிறகுதான் நீங்கள் யார் என்பதை உங்கள் மூலமாகவே புரிந்து கொண்டேன்! அதற்கு பின்னர் அதற்கு தகுந்த மாதிரியான விருந்தை ஏற்பாடு பண்ணினேன்! அவ்வளவுதான்! ’என்றார். இந்த உலகத்தில் நாம் எல்லாம் அதிகம் படித்துவிட்டால் மட்டும் போதாது ! பண்பாடு வேண்டும். அது தான்முக்கியம். அதைப் புரிந்து கொள்வதற்காகத் தான் இந்தக்கதை.

இப்பொழுதும் நம்மில் பலர் அடிக்கடி மிருகங்களை சம்மந்தப்படுத்தி பேசுவார்கள். இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டார்கள் ‘ உன்னிடம் நான் சிநேகிதம் வைத்ததகு பதிலாக ஒரு எருமைமாட்டிடம் சிநேகிதம் வைத்திருக்கலாம்! ’ என்றார் ஒருவர்.

‘வைத்திருக்கலாம் ! ஆனால் அதற்கு எருமைமாடு சம்மதிக்கவேண்டுமே !’என்றார் அடுத்தவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கருணா, சபையில் பதவிப் பிரமாணம்; ஜே.வி.பி அமர்வுகளை புறக்கணிப்பு

## சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின்தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் கருணா நேற்று செவ்வாய்க் கிழமை பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜே.வி.பியினரால் ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற வெற்றிடத் துக்கே கருணா நியமிக்கப்பட்டிருந்தார். இவர் சபாநாயகர் முன்நிலையில் பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டிருந்த அதேநேரம் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி சபை அமர்வுகளைப்புறக்கணித்துள்ளது. தம்முடன்செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் மீறி தமக்கு வழங்கப்பட வேண்டிய ஆசனத்துக்குப் பிறிதொரு வரை நியமித்திருப்பதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம்ஆட்சிக்கு வருவதற்குத் தாம் கடுமையாகப் பாடுபட்டிருந்த நிலையில் தற் பொழுது தம்மால் ஏற்படுத்தப்பட்ட வெற்றிடத்துக்கு வேறொருவரை நியமிப்பது ஏற்றுக் கொள்ள முடியாது என விஜித ஹேரத் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் தேசியப்பட்டியல் ஆசனங்களை எவ்வாறு பங்காளி க்கட்சிகளுக்குள் பிரித்துக் கொள்வது என்பது பற்றித் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டியிருக்கும் அவர். இதற்கமைய தமது பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமர சிங்க வெளியேறியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஜே.வி.பி உறுப்பினர் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

இதற்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுப்பது பற்றியும் ஜே.வி.பியினர் கவனம் செலுத்தியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-5)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி ஒன்றரை மாதத்தின் பின் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்த கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கல்வி ஒன்றரை மாத காலத்தின் பின்னர் மீண்டும் அரம்பமாகியிருப்பதாக கிழக்குப் பல் கலைக் கழகத்தின் உபவேந்தர் கலாநிதி என்.பத்மநாதன் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக பீடத்தை சேர்ந்த சிங்கள மாணவன் ஒருவர் கடந்த ஒகஸ்ட் மாதம் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து, பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதுடன், விடுதிகளில் தங்கியிருந்த சிங்கள மாணவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் மூதவையுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நேற்று முதல் மீண்டும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டதாகவும் பொலிஸாரின் பாதுகாப்புடன் நிர்வாகச் செயற் பாடுகள் ஆரம்பிக்கப்பட்டி ருப்பதாகவும்

கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு அதிக எண்ணிக்கை யான மாணவர்கள் சமூகமளித் திருந்ததாகவும் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி என்.பத்மநாதன் தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்குப் பல் கலைக் கழகத்தின் வர்த்தக பீட மாணவன் சுட்டுக் கொல்லப் பட்டதையடுத்து வடக்கு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் சிங்கள மாணவர்கள் மீள அழைக்கப்பட வேண்டும் என பல தரப்பினர் கோரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-5)

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாரம் தோறும் நடத்தப்படும் ஆன் மீக சொற்பொழிவு நிகழ்வில் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய ஆசிரியர் க. முருகமூர்த்தி சமயக்குரவர்கள் காட்டிய இந்து சமய விழுமியங்கள் என்னும் பொருளில் சொற்பொழி வாற்றவுள்ளார். (ஓ

## பாடசாலை விடுமுறை

(கொழும்பு)

இவ்வருடம் மூன்றாம் தவணை பாடசாலை வகுப்புகள் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக் கிழமையுடன் முடிவடைந்து விடு முறை ஆரம்பமாக உள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-19)

## இராசி பலன்

08.10.2008
(புரட்டாதி 22 ,புதன்கிழமை)
நவமி பின்னிரவு 3.01 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 3.51 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
மகாநவமி விரதம் , சரஸ்வதிபூஜை

| | |
|---|---|
| மேடம் | கடினமுயற்சி ,அதிகாரம், போசனசுகம் ,தூரதேசச்செய்தி |
| இடபம் | புதியதிட்டமிடல், தந்தைவழி உறவு, காரியதாமதம், இட மாற்றம். |
| மிதுனம் | வீண்பிரச்சினை, முயற்சி தடங்கல் ,ஆரோக்கியக்குறைவு. |
| கடகம் | செல்வாக்கு, முயற்சிகைகூடும், தெய்வநம்பிக்கை, போசனசுகம். |
| சிங்கம் | தேகநலன், தடைப்பட்டகாரியம் கைகூடும், நல்லசெய்தி, மனமகிழ்ச்சி. |
| கன்னி | வியாபார சிந்தை, ரோகநிலை, தன்னம்பிக்கைக்குறைவு, பணவிரயம். |
| துலாம் | மாதாசுகம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், எடுத்தகருமங்கள் தாமதமாகும் . |
| விருச்சிகம் | அந்நியர்சந்திப்பு, சுபநிகழ்வு, காரியஅனுகூலம், போசன சுகம். |
| தனுசு | அதிகசெலவு, உணர்ச்சிவசப்படல்,முயற்சிதாமதம்,பிரயாணம். |
| மகரம் | பெரியோர்உதவி, நல்ல முயற்சி, தெய்வசிந்தை ,போசனசுகம். |
| கும்பம் | பிரயாணம், அமைதிக்குறைவு, மனஸ்தாபம், காரியதாமதம். |
| மீனம் | குடும்பசுகம், போசனநன்மை, செய்தொழில்விருத்தி, காரிய சித்தி . |

வளவன்

# இரமேஸ்வரம் கடல் பகுதியில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கை

(இராமேஸ்வரம்)



இலங்கையில் புலிகள் கட்டுப்பாட்டு பகுதியில் இராணுவம் தீவிர தாக்குதலில் ஈடுபட்டுள்ளதால். தமிழக கடலோர பகுதி மீனவர்கள் வீடுகளில் இலங்கையர்கள் தங்கியுள்ளனரா என புலனாய்வுத் துறையினர் கண்காணித்து வருகின்றனர். நாட்டின் கடலோரப் பகுதியில் ஊடுருவல், ஆயுதக் கடத்தல் போன்ற சம்பவங்கள் நடப்பதை தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதை தொடர்ந்து கடலோர பகுதி முழுவதும் இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல் படை ரோந்து பணி தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கிளி நொச்சி, முல்லைத்தீவு பகுதியில் புலிகளின் போர் நிலைகள் மீது தொடர்ந்து குண்டு வீசி தீவிர தாக்குதல் நடத்தி வரும் இலங்கை இராணுவம் புலிகள் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள மக்களை கிளிநொச்சியை விட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளது.

இதனால் புலிகள் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து ஏராளமான தமிழர்கள் வெளியேறி, முகாம்களில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இரா ணுவத்தின் தாக்குதலில், புலிகளின் தரப்பில் அதிகளவில் உயிர்ப் பலி ஏற்பட்டுள்ள நிலையில் காயமடைந்த புலிகள் இயக்கத்தினர் சிகிச்சை பெற தமிழகம் வர வாய்ப்புள்ளது.

புலிகள் ஊடுருவலை தடுக்க இராமேஸ்வரம் கடல் பகுதியில் இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல் படையினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இராமேஸ்வரம், தனுஷ்கோடி மற்றும் பாம்பன் கடல் பகுதியில் இந்திய கடற்படை கப்பல்களும் கடலோர காவல் படைக்கு சொந்தமான ஹோவர் கிராப்ட் கப்பலும் 24 மணி நேரமும் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறது.

இந்திய கடற் படையின் ரோந்து பிரிவினரும், மீன் பிடிக்க சென்று திரும்பும் படகுகளில் மீனவர்களுடன் சேர்ந்து இலங்கையர்கள் யாரும் வருகிறார்களா என்று சோதனை செய்கின்றனர். கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் இராமேஸ் வரம் மீனவர்கள் இந்திய கடல் எல்லை தாண்டி செல்லக்கூடாது என மீன் துறை அதிகாரிகள் மீனவர்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளனர். (ஓ-5)

## முகூர்த்த நிர்ணயமும் சமஸ்கிருத வகுப்பும்

(யாழ்ப்பாணம்)

நாளை வியாழக்கிழமை விஜயதசமி தினத்தன்று காலை 11 மணிக்கும் 1 மணிக்கும் இடையில் புலோலி புற்றளை பிள்ளையார் ஆலய மண்டபத்திலும் உடுப்பிட்டி துவாளிப்பிள்ளையார் அருகாமையிலும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

அதில்சமஸ்கிருதம், முகூர்த்த நிர்ணயம், ஆலய அமைப்பு விதிமுறைகள் கற்பிக்கப்படும். அர்ச்சகர்கள், குருமார்கள் சமூகம் தந்து பயன்பெறுமாறு அகில உலக இந்து குருமார் சங்கச் செயலாளர் கோ. சோமசுந்தரக்குருக்கள் அறிவித்துள்ளார். (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ் .மாநகர சபை எல்லைக்குட்பட்ட அரியாலை . கொழும்புத்துறை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) இன்று புதன் கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை கொழும்புத்துறை சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2மணிமுதல் 3.30 மணிவரை கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ் .மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுந்தர்மடம் அருள் மிகு ஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி விழா நிகழ்வுகளில் நாளை வியாழக்கிழமை மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் விஜயதசமி எனும்தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஓ)

## புதிய நியமனம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்கான [illegible] பிரதிக்கல்விப்பணிப்பாளராக எஸ். [illegible] நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண கல்வித்திணைக்களத்தில் கடமை ஆற்றிய இவர் கடந்தமாதம் 25 ஆம் திகதி தொடக்கம் [illegible] செய்யப்பட்டுள்ளார். (ஓ-29)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

[illegible] இராசரத்தினம் பவளம்மாவின் [illegible] நவீன பாடசாலை அபிவிருத்தியை நோக்கி என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு 11 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தொண்டர் ஆசிரியர் சங்க கலந்துரையாடல் நடைபெற்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரிடம் பெயர் பட்டியல் சமர்ப்பிக்கப்பட இருப்பதால் நேர் முகப் பரீட்சைக்குத் தோற்றிய தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் உரிய ஆவணங் களுடன் தங்கள் பெயரை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜப்பெருமாள் தேவஸ்தான மகோற்சவத்தில் இன்று இரதோற்சவம் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி பூதேவி, சிறிதேவி சமேத வெங்கடேச வரதராஜப்பெருமாள் 10 மணிக்கு இரதத்தில் ஆரோகணித்து வீதி வலம் வருவார்.

நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 8

சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காக தகுதி வாய்ந்த தேசிய நியாய சபைகளில் பயனுறுதியுடைய பரிகாரத்தைப்பெற உரிமையுடையவர்களாவர்.

## விஜயதசமி விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதி புலேந்தன் பாலர் பகல்பராமரிப்பு இல்ல விஜயதசமி விழாவும் ஏடு தொடக்கலும் நாளை வியாழக்கிழமை இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# உலக மாற்றங்களுக்கேற்ப திட்டம் வகுத்துச் செயற்பட ஆசிரியர்களுக்கு அதிக விடுமுறை தேவைப்படுகிறது

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் சேவையில் உள்ளவர்கள் அதிக லீவு நாட்களை அனுபவிக்கிறார்களே என்ற ஏக்கப் பார்வை ஏனையவர்களிடம்



உள்ளமையைக் காண முடிகின்றது. ஆனால் உண்மையில் அவர்கள் குறிப்பிடும் நாட்கள் ஓய்வு நாட்கள் அல்ல என்பதை அவர்கள் உணராது இருக்கின்றனர். இவ்வாறு தெரிவித்தார் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்.

கோப்பாய்க் கல்விக் கோட்ட ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 5ஆம் திகதி கோப்பாய், உரும்பிராய், அச்சுவேலி, வட்ட லயன்ஸ் கழகங்களால் ஒழுங்கு செய்யப்பட்டு லயன் மருத்துவர் வை. தியாகராஜா தலைமையில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலா சாலையில் இடம் பெற்ற வேளை பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மாறி வரும் உலக ஒழுங்கிற்கு ஏற்பக் கல்வியும் பல மாற்றங்களை கண்டு வருகிறது. இம் மாற்றங்களை உள்வாங்குவதற்கான அறிவைப் பெற்றுக் கொள்ளவும் தர வட்டங்களை அமைத்துச் செயற்படவும் ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கு அதிக ஓய்வு நாட்கள் தேவைப் படுகின்றன.

யாழ்.கல்வி வலயத்தில்கேப்பாய்க் கோட்டம் கல்வி நிலையில் பின் தங்கியிருந்தாலும் தற்போது இக் கோட்டப் பாடசாலைகளில் ஓர் எழுச்சி உணர்வு ஏற்பட்டிருபபதை அவதானிக்க முடிகிறது.

இன்னும் சில காலங்களில் கோப்பாய்க் கோட்டம் முன்னிலைக்கு வரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

கோப்பாய்க் கோட்டக் கல்வி எழுச்சிக்கு கோப்பாய், உரும்பிராய், அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தினரின் பங்களிப்புச் சொல்லில் அடங்காதது. ஆங்கிலம், கணிதம் போன்ற முக்கிய பாடங்களின் வளர்ச்சிக்கு எம்முடன் இணைந்து லயன்ஸ் கழகத்தினரும் பங்களிப்புகளை நல்கி வருகின்றனர் என்று கூறிய அவர் ஆசிரியர்களை ஏணிப்படி, ஆதவன், மெழுகுதிரி எனப் பல்வேறு வகைகளில் உருவகப்படுத்திப் பாராட்டிப் பேசினார்.

முன்னதாக நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், மறைக்கல்வி நடு நிலைய இயக்குநர் அருட்பணி ஜோர்ஜ் அடிகள் ஆகியோர் ஆசியுரைகளை நல்கினர்.

நிகழ்வில் முக்கிய அம்சமாக கோப் பாய்க் கோட்டத்திலுள்ள அனைத்து அதிபர், ஆசிரியர்களும் அவர்களது பெயர் பொறிக்கப் பட்ட பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிப்புப் பெற்றவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரின் பாதங்களில் வீழ்ந்து ஆசி பெற்றனர். (அ)

# கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தை இந்துக்கல்லூரியாக தரமுயர்த்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தை இந்துக் கல்லூரியாகத் தரமுயர்த்தும்படி மேற்படி பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் வடமாகாணக் கல்வி அமைச்சைச் கோரியுள்ளது.

இது குறித்து மேற்படி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள் இணைந்து கல்வியமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது,

எமது பாடசாலை குறுகிய காலத்திற்குள் சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருகிறது. இரு மாடிக் கட்டடங்களைக் கொண்ட எமது பாடசாலையில் சகல வளங்களும் அடங்கியுள்ளதுடன் மாணவர்கள் கல்வியிலும் உயாந்த நிலையில் உள்ளார்கள். 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க. பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் கணிசமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். பல்கலைக்கழகத்திற்கும் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள்.

எனவே, மேலும் எமது மகாவித்தியாலயம் வளர்ச்சி அடைவதற்காக இப் பாடசாலையை இந்துக் கல்லூரியாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். (ஓ-5)

## சங்கானை கோட்ட உதைபந்தாட்டம் வட்டு மத்திய கல்லூரி சம்பியன்



சங்கானை கோட்ட பாட சாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்ட போட்டிகள் கடந்த 23 ஆம் திகதி வட்டு யாழ்ப் பாணக் கல்லூரி பிக்னல்மைதானத்தில் கோட்டக் கல்விப பணிப்பாளர் துரை எங்கரசு தலைமையில் நடைபெற்றது.

மேற்படி உதைபந்தாட்ட போட்டியில் 18 வயது பிரிவில் வட்டு மத்தியகல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதின. போட்டி ஆரம்பமானநேரம் முதல் இரண்டு அணிகளும் கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டபோதும் கோல்கள் எதுவும் பெறாத நிலையில் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இடை வேளையைத் தொடர்ந்து ஆட்டம் ஆரம்பமான நேரம்முதல் இரண்டு அணி வீரர்களும் விறு விறுப்பாக ஆடிய போதும் வட்டு மத்திய கல்லூரி வீரர்களின் அபார ஆட்டம் காரணமாக முதலாவது கோல் பெறப் பட்டது. தொடர்ந்து வட்டு மத்திய கல்லூரி வீரர்கள் கோல்கள் பெறும் பல சந்தர்ப்பங்களை தவறவிட்டனர். விக்ரோறியாக் கல்லூரி வீரர்கள் கேல்களைபெற்று விடலாம் என பலமுறை முயற்சித் போதும் வட்டு மத்திய கல்லூரி வீரர்களின் முயற்சியால் கோல்களை பெறும் சந்தப்பங்கள் தவிர்க்கப் பட்டன.

மேற்படி போட்டியில் வட்டு மத்திய கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் விக்ரோறியாக் கல்லூரி அணியை வெற்றி கொண்டு கோட்ட மட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுது. (ஓ-27)




## யாழ்.செய்திகள்

## கட்டுரைப்போட்டி முடிவுகள்

நெடுந்தீவு இந்து மாணவர் மன்றத்தினால் தீவக வலயப் பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

பிரிவு -1

க. சோபிதா - நயி.மகா. வித்தி, அ.கிரிஜாலினி - நயி. மகா வித்தி, க.பானுஜா - கால. ஆ. தியா. மத். மகாவித்தி.

பிரிவு -2

க. சாஜினி - நயி. ஸ்ரீ. கணேசா கனிஸ்ட. மகாவித்தி, கி. சிவ நளினா - கலா. ஆ. தியா. மத். மகா வித்தி. தி.உமாப்பிரியா -நயி.மகா வித்தி.

பிரிவு - 3

க. ரூபிகா - கலா. ஆ. தியா. மத்தி. மகா வித்தி, இ. ரிசிதா - நயி. மகா. வித்தி, இ. ஜனனி - ஊர். புனித. அந். கல்லூரி.

அவர்களுக்கான பதக்கமும் சான்றிதமும் நாளை வியாழக்கிழமை விஜயதசமி விழாவின் போது வழங்கப்பட உள்ளதாக நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபர் எஸ். கிருஷ்ணதாஸ் அறிவித்துள்ளார். (ஓ)

# நோத்முதல் கோபல்லவா வரை (120)



**சேர் .பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் (14.09.1853-09.01.1924)**

அருணாசலம் அரசாங்க சேவையிலே அமைதியாகச் சிறப்புற்றிருந்த காலத்திலே 1902 ஆம் ஆண்டிலே ஆங்கிலேய மன்னராய் ஏழாவது எட்வேட் என்பாருக்கு முடிசூட்டு விழா நடைபெற்றது. அருணாசலம் முடிசூட்டு விழாவின் பரிசாக இலங்கைக்கு அரசியற்றிருத்தங் கொடுக்கப்படல் வேண்டும் என்று ஒப்சேவர் பத்திரிகையில் நயம்பட எழுதி, ஆள்பதி அவர்களையும் ஆங்கிலேயரையும் சிந்திக்க வைத்தார்.

குடியியற் சேவையிலமர்ந்த அருணாசலம் சீரும் சிறப்பும் பொறுப்பும் உள்ள உயர்ந்த உத்தியோகங்களை வகித்து, 1909 ஆம் ஆண்டில் பதிவாளர் நாயகம் என்னும் உத்தியோகத்துக்கு உயர்த்தப் பெற்றார். அவர் அவ்வுத்தியோகத்தமர்ந்த காலத்திலே எழுதிய பரிபாலன அறிக்கைகளை ஆங்கிலேயர் வெகுவாகப் புகழ்ந்து, ஆசியா வாசியாகிய ஒருவர் அத்துணை அழகாக எழுதினாரே என அதிசயித்தனர்.

அருணாசலம் பதிவாளர் நாயகமாக இருந்த காலத்திலேதான் இலங்கைச் சட்டசபையில் குறு - மக்கலம் திருத்தம் ஏற்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட சட்டசபையிலே நியமிக்கப்பட்ட உத்தியோக அங்கத்தவராய ஆங்கிலேயர் மத்தியிலே அருணாசலம் அவர்களும் நியமிக்கப்பெற்றார். அவ்வுத்தியோகத்தர் வரிசையிலே இருந்த இலங்கையர் அவர் ஒருவரே. தமிழர் நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் நடையுடை பாவனையில் தலைப்பாகையணிந்து அரச அன்னம் போல ஆங்கிலேயர் மத்தியில் அருணாசலம் அமர்ந்து ஆலோசனை கூறுவாராயினர்.

அருணாசலத்தைப் பார்க்கினும் வயதாலும் சேவை அநுபவத்தாலும் மூத்தவராய ஆங்கிலேயர் குடியியற் சேவையிலிருப்பவும், ஆள்பதி சேர். ஆதர் கோடன் அருணாசலத்தையே அப்பதவிக்குத் தகுதியானவர் எனக் கண்டு அதில் அவரை நியமித்தார். பதிவாளர் நாயகமாயமர்ந்த அவர் அத்திணைக்களத்தில் செய்த திருத்தங்கள் பல. அவற்றைச் சுருக்கிச் சொல்லுதல் இயலாது.

அவர் அப்பதவியிலமர்ந்த காலத்திலே 16-1913 தொடக்கம் சட்ட நிர்வாக சபையிலும் அமர்ந்து ஆள்பதி அவர்களுக்கு மந்திராலோசனை கூறிவந்தார்.

மந்திராலோசனை கூறும் சட்ட நிர்வாக சபையிலமர்ந்த அருணாசலம் அவர்கள்

**மீள் பார்வை**

ஆங்கிலேயரின் பணிக்குழுவாட்சியில் இன்றியமை யாததோர் இடத்தைப் பெற்றிருந்தார். அவருடைய திறமையை ஆங்கிலேயர் வெகுவாக மெச்சினர். அவர் அப்பதவியிலிருந்து இளைப்பாறிய போது அவருடைய சேவைநலத்தை வெகுவாகப் பாராட்டிய ஆங்கிலேய அரசாங்கம் அவருக்கு 1914 ஆம் ஆண்டிலே நைற் பட்டம் அளித்துக் கௌரவித்தது.

அருணாசலம் சட்ட நிர்வாக சபையிலமர்ந்து ஆலோசனை கூறிவந்த அழகை அக்காலத்தில் சட்டத்துறை நாயகமாயிருந்த சேர். அன்ரன் பேற்றம் என்னும் ஆங்கிலப் பெரியார் பின்வருமாறு பாராட்டியுள்ளார். "சட்ட நிருவாக சபையை அலங்கரித்து அதற்குப் பெரியதோர் அணிகலமாகவன்றோ அருணாசலம் இருந்தார். எவருக்கும் விளங்காத எந்த கட்டளைச் சட்டத்தையும் அவர் எளிதிற் படித்து விளங்கிப் பிறருக்கு இலேசாக விளங்கவைப்பார். கமக்காரருடைய பிரச்சினைகள் முதல், அரசாங்க உத்தியோகத்தரின் பெரிய பிரச்சினைகள்வரை அவர் தீர்த்து வைப்பார். எதனையும் உரிய காலத்திற் கருத்தூன்றிப் படித்து ஆராய்ந்து உரிய முறையிற் செய்து நிறைவேற்றுவது அவருடைய தனிப்பட்ட பண்பாகும். அது அவரிடத்தில் இயல்பாயமைந்ததை நான் நன்கறிவேன்"

இவ்வாறு மந்திராலோசனைச் சபையில் உடனமர்ந்திருந்த ஓர் ஆங்கிலேயர் அருணாசலத்தைப்பற்றி எழுதுவாராயிருந்தால் அவரின் பெருமையை என்னென்பது. பெரிய உத்தியோகத்தை வகித்துக்கொண்டே சட்ட சபையின் உத்தியோக அங்கத்தவராயும் சட்ட நிர்வாக சபையிலே ஆலோசகராயும் இருந்த அருணாசலம் ஒருமுறை அரசாங்கத்தின் போக்கை விருப்பவில்லையென்பதை வெளிப்படையாகச் சட்டசபைக் கூட்டத்தில் ஆள்பதி அவர்கள் முன்னிலையில் பாதகமாக வாக்களித்தார். உத்தியோக அங்கத்தவர் அவ்வாறு செய்யலாகாது என்பது குடியேற்ற மந்திரியாரது கட்டளை. ஆனால் அருணாசலத்தின் நேர்மையைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் இயலவில்லை.

குடியியற் சேவையிலமர்ந்திருந்த காலத்தில் அருணாசலம் நீதிபதியாகவே பன்னெடுங் காலம் கடமையாற்றினார். அவருடைய நேர்மையையும் அறிவாற்றலையும் அக்காலத்தில் நீதியரசராயிருந்த *மொன்கிரியல்* வெகுவாகப் பாராட்டியுள்ளார். "அருணாசலம் புகழ் பெற்ற அறிஞர். அவர் புராதன ஆங்கில இலக்கியங்களிலும், கீழைத்தேயத்து இலக்கியங்களிலும் மிகுந்த பாண்டித்தியம் வாய்ந்தவர். பேச்சுவன்மையும் ஆராய்ச்சிப் புலமையும் அவருக்கு இயல்பாயமைந்துள்ளன. அவர் எந்த அலுவலையும் கண்ணுங்கருத்துமாகச் செய்து நிறைவேற்றும் இனிய இயல்பினர்". என்பன நீதியரசின் பாராட்டுரையாகும்.

உவிலியம் டிக்பி என்னும் ஆங்கிலேயர் நல்ல இருதயம் உள்ள பெரிய மனிதர் 1876ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்து ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியராய் இருந்தவர். அவர் தமது எழுத்து வன்மையால் எல்லோருடைய மனத்தையுங் கவர்ந்தார். அவர் 1877ஆம் ஆண்டில் இலங்கை அரசியல முறையில் சீர்திருத்தங்கோரி "பிரதிநிதித்துவ ஆட்சிக்குப் பக்குவம் வாய்ந்த புராதனப் பெருமையுள்ள ஒரு நாடு" என்று இலங்கையின் உரிமையை எழுதி இலங்கையரை விழிப்படையச் செய்தார். அவர் இலங்கையை விட்டு இந்தியாவுக்குச் சென்று அங்கிருந்த காலத்தல் அருணாசலத்தின் அறிவாற்றலை நினைத்து அவரைத் தம்முடன் இந்தியாவுக்கு வருமாறு எழுதினார். என தன்புக்குரிய அருணி, நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதையே நான் வெகுவாக விரும் புகிறேன். மிகவும் சிறப்பானதோர் இலட்சி யத்தை நிலைநாட்டவே நீங்கள் விரும்பு கிறீர்கள் என்பதை நான் நன்கறிவேன். தங்கள் விவேகத்தையும், பண்பட்டசிந்த னைத் தூய்மையையும், தாராளமான குணநலனையும் செவ்வனே முழுதாக உபயோகிப்பதற்குத் தாங்கள் தற்சமயம் வகிக்கும் தானம் தடையாய் உள்ளது. தங்க ளைச் சூழவுள்ள தடைகளையும் கட்டுப்பாடுகளையும் புறங்கண்டு, இப்பொழுது தாங்கள் மேற்கொண்டொழுகும் புறநீங்கலான வாழ்வின் போக்கை மாற்றிக்கொண் டாலன்றி நீங்கள் எடுத்துக்கொண்ட இலட்சி யத்தை அடைய முடியாது. தங்களைப் போன்ற பெரியார்

**க.சி.குலரத்தினம்**

ஒருவரை இப்பெரிய தேசத்தில் காண்பதற்கு இயலாதவனாய் இருக்கின்றேன்" என்பது டிக்பியன் கடிதமாகும்.

ஒருசமயம் டிக்பியின் உதவியை நாடி அருணாசலம் கடிதம் எழுதியிருந்தார். அதில் "மதிப்புக்குரிய நண்பர் டிக்பி அவர்களுக்கு எழுதுவது. தங்கள் ஆப்த நண்பரும் குடியேற்ற மந்திரியாருமாகிய றிப்பன் பிரபுவைக் கொண்டு இலங்கையில் உள்நாட்டு நிர்வாக அலுவலி லாவது சுதந்திரம் அளிக்குமாறு செய்விக்க உதவி செய்வீர்களா? கிழக்கு நாடுகளில் ஆங்கிலேய ஆட்சி ஒரு முகமாக எல்லாத் துறைகளையும் நிருவாகஞ் செய்வதால் உள்நாட்டு மக்ளுக்குத் தங்கள் நாட்டலுவல்களைக் கவனிக்கும் வாய்ப்பு வாய்க்காது போனதைப் பற்றிப் பலமுறை வருந்தியுள்ளேன். மக்கள் தங்கள் அலுவல்களை நிருவகிக்கத் தருணம் கிடைக்காமையால், தங்கள் பொறுப்புக்களை நடத்தும் இயல்பாண சுதந்திர வல்லபத்தை இழந்து விட்டனர். ஆங்கிலேய அதிகாரிகள் நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டிய அலுவல்களைப் புறக்கணிக்கிறார்கள். அவர்கள் ஏகாதிபத்தியத்திலே ஊறிக்கிடக்கிறார் களாதலால் சீர்திருத்தங்களை ஏற்க முற்பட மாட்டார்கள். சீர்திருத்த அலுவல்களைக் கையாளத் தருணமளிக்கவும் மாட்டார்கள். இதைப்பற்றி எங்கள் நாட்டு ஆள்பதிகளுடன் பலமுறை பேசியிருக்கின்றேன். (தொடரும்)

# எமது பாரம்பரிய பிரதேசத்திற்குப் பொருத்தமான மாற்றுச்சக்தி வளங்கள்: ஒரு புவியியல் நோக்கு (5)

**3.0உயிர்ச்சுவட்டு (திணிவு) எரிசக்தி வளம்**



சூரிய சக்தி வளம், காற்றுச் சக்தி வளம் என்பவற்றை எவ்வகையில் பயன்படுத்தலாமென்பதைப்பற்றி சென்றவாரகட்டுரையில் ஆராய்ந்தோம். இக்கட்டுரை உயிர் ச்சுவட்டு (திணிவு) எரிசக்தி வளம் எமது பிரதேசத்திற்கு பொருத் தமான முறையில் எவ்வகையில்பயன்படுத் தலாமென் பது பற்றிய ஆராய்கின்றது.

3.1 நறேசா நிறுவன ஆய்வொன்றின்படி இலங்கையில் அடிப்படை எரிசக்தி நுகர்வில் 70 வீதம் உயிர்ச்சுவட்டு (திணிவு) எரிசக்தி (விறகு) மூலமே பெறப்படுவதாகத் தெரியவருகின்றது. கிராமிய, தோட்டத் துறையில் 90 வீதம் உயிர்ச்சுவட்டுத் திணிவே எரிசக்தி தேவையை நிறைவுசெய்கின்றது. பொதுவாக சூழலியாளர் குற்றம் சுமத்துவது போல் மேற்படி எரிபொருள் பாவனைக்காகக் காடுகள் அழிக்கப்படுவது அரிதே. அவ்வப் பிரதேசங்களில் பயிராகும் பயன்தரு தாவரங்களின் உப உற்பத்திகளே விறகுக்காக பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக பெருந்தோட்டப் பகுதிகளில் தேயிலைச் செடியின் காய்ந்த தடிகள், இறப்பர் மரத்தின் எச்சங்கள் என்பனவும் யாழ்ப்பாணப்பிரதேசத்தில் பனை மரத்தின் உப உற்பத்திகளான ஓலை, மட்டை, ஊமல் போன்றனவும் எரிபொருளாக அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. தென்னைமரத்தின் உப உற்பத்திகள், கறுவா, கரும்பந்தடி என்பனவும் அவை பெருமளவு காணப்படும் பிரதேசங்களில் விறகுக்காக பயன்படுத்தப் படுவதைக் காணலாம்.

காட்டுத்தாவரங்களை விறக்குக்காக உற்பத்தி செய்து எரிபொருளாக பயன்படுத்தும் வழிமுறைகளும் பல நாடுகளில் பின்பற்றப் படுகின்றன. இதற்காக ஆமணக்கு, சூரிய காந்திச்செடி போன்றன பெருமளவு உதவுகின்றன. எண்ணெய்த்தாவரங்களிலி ருந்து உயிரியல் டீசல் உற்பத்தி செய்யக் கூடிய சாத்தியக்கூறுகளும் உள்ளன. உயிரியல் தொழில்நுட்ப அறிஞர்கள் பிரதேசரீதியாக இவை உற்பத்தி செய்யப்படும் சாத்தியம் பற்றி சிந்திக்கலாம்.

ஓப்பீட்டளவில் எம்மால் குறைந்த செலவில் பெறக்கூடிய சக்தி வளமாக உயிரி வாயுச் சக்தி விளங்குகின்றது. பொதுவாக தாவர, மிருக, மனிதக்கழிவுகளிலிருந்து உயிர்வாயு பெறப்படலாம். இவ்வகை கழிவுச்சேதனப்பொருட்கள் காற்றில்லாத சூழ்நிலையில் சிலநுண் உயிர்களின், (மீதேனிக் பக்ரீறியா) தாக்கத்தினால் பிரிகையடைந்து நொதிக்கும்போது உண்டாகும் வாயுவே உயிர் வாயு ஆகும். பொதுவாக மீத்தேன் வாயு என வழங்கப்படும் இவ்வாயு ஒரு வாயுக்கலவையாகும். இதிலே மீத்தேன் (Methane $CH_4$) 55-65 வீதமும், காபனீர் ஒட்சைட் ($CO_2$) 35-45 வீதமும், நைதரசன் ($N_2$) 3வீத மும், ஐதரசன்($H_2$),ஓட்சிசன் ($O_2$) ஐதரசன் சல்பைட் ($H_2S$), என்பன ஒவ்வொரு வீதத் திலும் அடங்கியுள்ளன.

உயிர்வாயுவை மிருகக்கழிவுகளிலிருந்து, குறிப்பாக சாணத்திலிருந்து பெற்றுக் கொள்வது எமக்கு பொருத்தமானதாகவும் இலகுவானதாகவும் அமையும். இதனால் இவ் வாயுவை கிராமிய விவசாய மக்கள் சாண எரிவாயு என வழங்குகின்றனர். இந்தியாவிலும், சீனாவிலும் இதன் பயன்பாடுகள் பழையகாலம் முதலாக இருந்து வருகின்றது. பிலிப்பைன்ஸ், கொரிய ஆகிய நாடுகளிலும் இவை குறிப்பிடத்தக்க வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் சமையலுக்காக சாணவிராட்டியைப் பயன்படுத்தும் வழக்கம் நீண்டகாலமாக இடம்பெற்று வருவதாகும். விறகுத்தட்டுப்பாடு அங்கு இதனை ஊக்குவித்துள்ளது. இந்திய கிராமங்களில் குறிப்பாக தமிழ் நாட்டு கிராமங்களில் சாண எரிவாயுச் சக்திப்பயன்பாடானது அரசினால் திட்டமிடப்பட்ட முறையில் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. பெருந்தொகையான கிராமிய மக்கள் இதன் பாவனையால் பெருமளவு பயன்பெற்று வருகிறார்கள். எமது கிராமிய விவசாய மக்களும் தமது அன்றாட வீட்டுத் தேவைக் கான சக்தியைச் சாண எரிவாயுவிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு சாண எரிவாயுவை உற்பத்தி செய்யக் கூடிய வழி பற்றிய தொழில்நுட்ப அறிவை அவர்களுக் கு நாம் வழங்க வேண்டும்.

பொதுவாக எமது வீடுகளில் ஒளி பெறுவதற்கும் சமையல் செய்வதற்குமே கூடுதலான எரிபொருள் தேவைப் படுகின்றது. எரிபொருட்களின் விலை ஏற்றம் விறகுப் பற்றாக்குறை என்பன தீராத பிரச்சினைகளாகத் தொடரவுள்ளன. இப்பிரச்சினைக் குரிய பொருத்தமான மாற்று வழிகளி லொன்று கிராமம்தோறும் சாண எரிவாயு வை வீட்டிற்கு ஒளியேற்றவும் சமையல் செய்வதற்கும் பெருமளவு பயன் படுத்தும் வழியை காண்பதேயாகும். சிலிண்டர்களில் நிரப்பப்பட்டு விற்பனையாகும். எல். பி வாயுவையே நகரப்புற மக்கள் சமையலுக்காக பெருமளவு பயன்ப டுத்தி வருகின்றார்கள். சாண எரிவாயு எல். பி வாயுவுக்கு நிகரான எரிசக்தியை வழங்க வல்ல தாகும். அத்துடன் "பெற்றோமக்ஸ்" விளக்கை இவ் வாயுவைப் பயன்படுத்தி எரியச்செய்யமுடியும். இவை தவிர இவ்வாயுவின் துணையுடன் இயந்திர மோட்டார்களை இயங்கச் செய்ய முடியுமா கையால் ஒளியேற்றவும், நீர் இறைக்கவும், மின்சாரம் பெறவும் இதனைப் பயன்படுத் தமுடியும்.

சாண எரிவாயு எரியும்போது கரிபடியாத சுவாலை வெளிவருவதால் சமையல் பாத்திரங்களில் கரிபடிவதில்லை. புகை குறைவாகையால் வளிமாசடைவதில்லை.

**பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்**
தலைவர் ,சமூகவியல்துறை
இணைப்பாளர்,புறநிலைப்படிப்புகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மேலும் எரிவாயு பெற்ற பின் எஞ்சும் சாணம் கூடுதலான பயிர்ப்போசனையைக் கொண்டது. இது கிருமிகள், களைகள் அற்றதாகவும் காணப்படுகின்றது. இச்சாணத்தை உரமாக்கப்பயன்படுத்தும்போது விவசாய உற்பத்தி அதிகரிப்பதுவும் கண்டறியப்பட்டது.

நாம் பின்பற்றத்தக்க சாண எரிவாயு உற்பத்திச் சாதனங்கள் இரு வகைப்படும்.

1. மிதக்கும் வாயுகொள்கலனுடன் கூடிய இந்தியமுறைச் சாதனம்
2. அமுக்க கொள்கலனுடக் கூடிய சீன முறைச்சாதனம்.

(தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்

**பகுதி A　　பரீட்சை II　　நேரம் -40 நிமிடங்கள்**

### A　　Answer

1　$2\frac{1}{2} = \frac{\square}{2}$　　________

2　5.3 – 2.1　　________

3　50mm = □ cm　　________cm

4　x + 5 = 6 ஆயின், x சமன்　　________

5　□ + 80° = 180°　　________°

6　$2^3$ இன் பெறுமானம்　　________

7　81 - 29　　________

8　3 இன் காரணிகள்　　________

9　8cm x 7cm　　________$cm^2$

10　$3^2 + 4^2 = \square^2$　　________

### B　　Answer

1　கீழே தரப்பட்ட பின்னங்களில் முறைமையில்லாப் பின்னங்களை வேறாக்கி எழுதுக.

$\frac{3}{4}, \frac{2}{2}, 1\frac{3}{8}, \frac{11}{3}, \frac{1}{5}$

2　சுருக்குக. 7.8 – 3.9　　________

3　4050mm ஐ m இல் தருக.　　________m

4　தீர்க்க. 2x + 3 = 7　　________

5　$117^{\circ}$ இன் மிகை நிரப்பு கோணத்தை எழுதுக.　　________°

6　$2^{-4}$ இன் பெறுமானத்தைக் காண்க.　　________

7　3, 4, 5, 5, 6 ,7 ,8 என்ற எண்பரம்பலின்
a)வீச்சு யாது?　　a)________
b)இடையம் யாது?　　b)________

8　15　12　18　51　21

1 தவிர்ந்த வேறு எவ்விலக்கம் இவ்வெண்களின் காரணியாக அமையும்?　　________

9　$1\ ha = 10,000m^2$


200m நீளம் 100m அகலமான செவ்வக வயலின் பரப்பளவை ha இல் காண்க.　　________ha

10　செங்கோண முக்கோணி ஒன்றின் செங்கோணத்தை அமைக்கும் பக்கங்களின் நீளங்கள் முறையே 6cm, 8cm ஆயின், செம்பக்கத்தின் நீளம் யாது?　　________cm

### C　　Answer


1　8 | y
3 மீதி 7/ y ஐக் காண்க.　　________

2　சுருக்குக.
4.32 – 1.331　　________

3　


நேர்கோடு AB இன் நீளத்தின் 100 மடங்கை
a) mm இல்
b) cm இல்
c) m இல் எழுதுக.
a)______mm
b)______cm
c)______m

4　தீர்க்க. 3x - 5 = x + 3　　________

5　


x ஐக் காண்க.　　________

6　$(2^3)^2$ இன் பெறுமானத்தைக் காண்க.　　________

7　கணிதப் பரீட்சை ஒன்றில் 9 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் தரப்பட்டுள்ளன.
45,32,60,55,38,55,43,60,55
a)ஆகாரத்தைக் காண்க.　　a)________
b)இடையத்தைக் காண்க　　b)________

8　F = { 1 , 2 , 3 , 6 , □ , □ , □ , 78 }
F = 78 இன் காரணிகளின் தொடை
விடப்பட்ட காரணிகளை எழுதுக.　　________


9　ஒரு செவ்வகத்தின் பரப்பளவு $450cm^2$, அதன் நீளம் 30cm ஆயின், அகலத்தை cm இல் காண்க.　　________cm

10　

தகவல்களுக்கிணங்க PQ இன் நீளத்தைக் காண்க.　　________


### D　　Answer

**1**　உருவில் காணப்படும் போத்தலில் உள்ள நீரின் அளவை லீற்றரில்,




a)கலப்பு எண்ணாக எழுதுக.
b)முறைமையில்லாப் பின்னமாக எழுதுக.
a)________ℓ b)________ℓ

**2**　சுருக்குக. 32.3 + 6.49 – 1.8
________


**3**　


செவ்வகம் ABCD இன் சுற்றளவை m இல் தருக.
________m

**4**　தரப்பட்டுள்ள உருவத்தின் சுற்றளவு 240cm ஆகும்.




a) a இல் சமன்பாடொன்றை அமைக்க.
b) a ஐக் காண்க.　　________

**5**　


a) $C\hat{y}A$ இன் குத்தெதிர்க்கோணத் திற்குப் பெயரிடுக.
b) அதன் பெறுமானத்தை பாகையில் தருக.
c) $C\hat{y}B$ இன்பெறுமானம் யாது?
a)________b)________°c)________°

**6**　$16^{3/4}$ இன் பெறுமானத்தை எழுதுக.
________


**7**　வகுப்பொன்றிலுள்ள 23 மாணவர்கள் கணித பாடத்தில் ஈட்டிய புள்ளிகளின் இடையம் 40 ஆகும்.
a)40 புள்ளிகளை ஈட்டிய மாணவனொருவன் கணித பாடத்தில் வகிக்கும் இடம் என்ன?
b)இம்மாணவனிலும் பார்க்க அதிகமான புள்ளிகளை எத்தனை மாணவர்கள் ஈட்டியுள்ளனர்?
a)________　b)________

**8**　27　48　54　63　72

a) இவ் எண்களில் எவை 4,6,9 இன் மடங்காகஅமையும்?
b) அவற்றின் காரணிகளை எழுதுக.
________

**9**　ஒரு செவ்வகத்தின் நீளம், அகலத்தை விட இருமடங்காகும்.. அதன் சுற்றளவு 54cm.
a) நீளத்தைக் காண்க.
b) அகலத்தைக் காண்க.
c) பரப்பளவு யாது?
a)________cm
b)________cm
c)________$cm^2$

**10**　மெல்லிய கம்பியொன்று வரிப்படத்தில் காட்டியவாறு ABC என்னும் செங்கோண முக்கோண வடிவிற்கு வளைக்கப் பட்டுள்ளது.




a)BC இன் நீளத்தைக் காண்க.
b)கம்பி நேராக்கப்பட்டு சதுர வடிவிற்கு வளைக்கப்பட்டால், பக்கமொன்றின் நீளம் யாது?
a)________cm　b)________cm

ஜே.மரியநாயகம்

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு
## க.பொ.த. உயர்தர பரீட்சை 2009
## பாட அலகு ரீதியான விளக்கங்கள்

ரி. பாலசுப்பிரமணியம்


02

## உயிரியல்

### குருதி இழையம்

குருதிநீர்ப்பாயம் **(Serum)** என்பது குருதிமுதலுருவில் இருந்து குருதியுறைதலையுண்டுபண்ணும்பம் புரதமான **Fibringen** நீக்கப்பட்டபின் பெறப்படுவதாகும்.

### குருதிக்கலங்கள் (Blood Cells)




1 **Erythrocyte/Red Blood Corpuscles**/செங்குழியங்கள்

ஒப்பீட்டளவில் மிக உயர் எண்ணிக்கையில் காணப்படும். $1mm^3$ குருதியில்
ஆணில் - 5.0 - 5.5 மில்லியன்கள்
பெண்ணில் - 4.5 – 5.0 மில்லியன்கள்
சராசரிமனிதனில் 30 – 35 மில்லியன்கள் R.B.C. உண்டு

- ❖ கடல் மட்டத்தில் வாழடவோரை விட உயரமான மலைகளில் வாழ்வோரில் RBC எண்ணிக்கை உயர்வானது.
- ❖ முதிர்மூலவுரு நிலையில் R.B.C. பிரதானமாக ஈரலில் ஆக்கப்படும் முதிர்ந்த மனிதனிலே செவ்வென்பு மச்சையில் ஆக்கப்படும்.

❖ RBC யின் உற்பத்திக்கு சிறுநீரகத்தின் கலன்கோள அயலுபகணத்தால் சுரக்கப்படும் Ergthropoietin என்னும் hormone அவசியம் இவைதவிர புரதங்கள்

$Fe^{2+}$, vitamin B-12, Folicacid என்பவை செங்குழிய உற்பத்திக்கு அவசியம்.

❖Vitamin B-12 செங்குழிய முதிர்ச்சிக்கு அவசியமானது

### அமைப்பு




இருகுழிவு வட்டததட்டுக்கள், கரு அற்றவை, இழைமணி, புன்மையத்தி அற்றவை குழியவுருவில் கரைந்த இரும்பைக் கொண்ட செந்நிறமான Hemoglobin நிறப் பொருள் காணப்படுகின்றது. அத்துடன் குழியவுருவில் Carbonicanhydrase என்னும் நொதியமும் கனியுப்பு அயன்களும் காணப்படும்.


- ❖ மென்சவ்வு வளையும் இயல்பும் , மீள்சக்தியும் கொண்டது
- ❖ மனிதனின் RBC – நான்கு மாதம் (120 நாட்கள்) வரை உயிர்வாழும்.
- ❖ முதிர்ந்த/இறந்த RBC மண்ணீரலில் சிதைக்கப்படும்.

*காயமடைந்த RBC ஈரலில் காணப்படும் Kuffer இன்கலங்களால் அழிக்கப்படும்.

**R.B.C.** தொழில்கள்

- ❖ சுவாச வாயுக்களைக் கொண்டு செல்லல்
- ❖ குருதியில் $P^H$ – மாறாது பேணுவதற்கு உதவுதல் (தாங்கற் தொழிற்பாடு)

1. மனித R.B.C. தமது செயல் வினைத்திறனை அதிகரித்துக் கொள்வதற்காக காண்பிக்கின்ற இரு கட்டமைப்பு இயல்புகளைக் குறிப்பிடுக?
   1. இரட்டைக் குழிவு வட்டத்தட்டு கட்டமைப்பு.
   2. கரு இழக்கப்பட்டிருத்தல்
   3. மீள்சக்தி உள்ள மென்சவ்வு
2. இரட்டைக் குழிவு பேணுவதற்காக உள்ள அம்சங்கள் எவை?
   1. குழியவன்கூடு ( Cytosketiton)
   2. நீர்உள்ளடக்கம்



### Haemoglobin

- இது குருதி முதலுருவிலும், கலங்களினுள்ளும் காணப்படுகின்ற சுவாச நிறப்பொருளாகும். சுவாச நிறப்பொருளைக் கொண்ட கலம் **RBC** ஆகும்.
- முழுவுடலி மனிதனின் ஈமோகுளோபின் ஆனது முதிர் மூலவுருவின் ஈமோகுளோபினில் இருந்து வேறுபட்டதாக இருக்கும்.
- இது ஒரு நாற்படைக்கட்டமைப்புடைய புரதமாகும்.
- ஒரு ஈமோகுளோபின் மூலக்கூறில் $4Fe^{2+}$ காணப்படும்
- ஒரு ஈமோகுளோபின் மூலக்கூறு $4O_2$ மூலக்கூறுகளுடன் சேரக்கூடியது

**2. Leucocytes / White blood corpuscles** (வெண்குழியங்கள்)




மனிதனின் குருதியிலே செங்குழியங்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைந்த எண்ணிக்கையில் காணப்படுகின்ற ஒரு குருதிக்கல வகையாகும் $1mm^3$ குருதியிலே ஏறத்தாள 7000 – 10000வரையிலான வெண் குழியங்கள் உண்டு. அவையாவும் அமீபாப்போலியுரு அசைவினைக் ( amoeboid movement) காண்பிக்கக் கூடிய திறமையுடையவையாகும்.

- ❖ மனிதனின் குருதியில் RBC:WBC = 600:1 ஆகப் பேணப்படும்
- ❖ செங்குழியங்களுடன் ஒப்பிடுகையில் W.B.C. பருமனில் பெரியவை கருவைக் கொண்டவை.

**குழியவுருவில் சிறுமணிகள் காணப்படும் அடிப்படையில் இரு வகைப்படும்.**

1. சிறுமணி கொண்ட வெண்குழியம். - (72%)
2. சிறு மணி அற்ற வெண்குழியம் - (28%)

**சிறுமணி கொண்ட வெண்குழியம்(Granulocytes):** குழியவுருவில் சாயத்தை ஏற்கும் ஆற்றலுடைய சிறுமணிகள் காணப்படுகின்றன. செவ்வென்பு மச்சையில் உற்பத்தியாக்கப்படும். சிறுமணிகள் சாயத்தை ஏற்பதன் அடிப்படையில் மூன்று வகைப்படும்.

| இல | Neutrophils | Eosinophils | Basophiles |
|---|---|---|---|
| 01 | மொத்த W.B.C.இல் ஏறத்தாள 70% | மொத்த W.B.C.இல் ஏறத்தாள 1.5% | மொத்த W.B.C. இல் ஏறத்தாள 0.5% |
| 02 |  Neutrophil |  Eosinophil |  Basophil |
| 03 | அமிலச் சாயத்தையும், மூலச்சாயத்தையும் ஏற்பத்தும் | இயோசின் என்னும் அமிலச்சாயத்தை ஏற்கும் | Methaline blue என்னும் மூலச்சாயத்தை ஏற்றக் கூடியது |
| 04 | பல்சோணைக்கரு(3-5) | இரண்டு சோணை தெளிவாகப் பிரிக்கப்பட்ட கரு | இரண்டு சோணை தெளிவாகப் பிரிக்கப்படாத கரு •(சிறுநீரகவுருவானது) |
| 05 | தொழில் தீன்குழியச்செயற்பாடு | ஒவ்வாமைத் தாக்கங்களில் பங்கெடுத்தல் | Heparin சுரத்தல் Histamin சுரத்தல் |
| 06 | இறந்தகலங்களை அகற்றுவதன் மூலம்துப்பரவாக்குதல் | பிறபொருளெதிரியைச் சுரத்தல் | தீன்குழியச் செயற்பாட்டால் பிறவுடல்களை அழித்தல். |

- ❖ நடுநிலைநாடிகள் தொற்று ஏற்படும் போது அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்படும்.
- ❖ நடுநிலைநாடிகளின் பிரதான தொழிற்பாடு தொற்றுதலடையும் பிறபொருட்களிற்கு எதிராகத் தொழிற்பட்டு பாதுகாப்பை வழங்குதலாகும்.
- ❖ அனுசேப ஒழுங்கீனங்களின்போதும் நடுநிலைநாடிகள் அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்படும். **e.g:** நீரிழிவு
- ❖ இயோசிநாடிகள் ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் எண்ணிக்கையில் பெருகும். **e.g:** asthma
- ❖ புழு (Worms) தொற்றுதலின்போது அவற்றுக்கெதிராகத் தொழிற்படக்கூடியவை இயோசிநாடிகள் ஆகும்.
- ❖ நடுநிலைநாடிகள் அசையும் ஆற்றலுடையது மயிர்கலன்களின் சுவரினூடு வெளியேறி இழையப் பாய்பொருளைச் சென்றடையும்.
- ❖ மூலநாடி ஐதான தொடுப்பிழையத்தில் அடிநாட்டற்கலமாகக் காணப்படும்.

(தொடரும்)

# கோண்டாவில் ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான இரதோற்சவ சிறப்பு மலர்—08.10.2008


## பிரதமகுருவின் ஆசிச் செய்தி



இந்த இரதோற்சவத்தை முன்னிட்டு இந்த கிராமமக்கள், இந்த தேசமக்கள், அன்னிய தேச மக்கள் எல்லோரும் இன மத பேதமின்றி ஒற்றுமையாகவும் சீரும் சிறப்பும் பெற்று சுக வாழ்வு வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ மந் நாராயணப் பெருமான் அருட்கடாட்சம் பெற பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் தீர்ந்து நிரந்தர சாந்தி, சமாதானம் அடைந்து எல்லோரும் சந்தோசமாக வாழ்வதற்கு எல்லாம் வல்ல நாராயணப் பெருமானை பிரார்த்தனை செய்து எல்லோருக்கும் எனது நல்லாசிகளை கூறுகின்றேன்.

சு.இரவீந்திரக்குமாரக்குருக்கள்,
பிரதம குரு , ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்.



## யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

வைகுந்த வாசன் வரதராஜபெருமாள் கோண்டாவில் பதியில் ஸ்ரீ வல்லீபுரநாதர் எனும் பெயரில் அருள் பாலித்துக்கொண்டிருக்கிறான். அந்த வகையில் வல்லீபுரநாதர் இன்று தேரேறி வந்து மக்களின் குறைகளை தீர்த்து நாட்டில் சாந்தி , சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என நாராயணப் பெருமானை பிரார்த்தனை செய்கிறேன். அத்தோடு சிறப்பு மலர் சிறப்பாக அமைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

கலாநிதி மா.வேதநாதன் ,
தலைவர் , இந்துநாகரிகத்துறை ,
இந்து நாகரிகத்துறை

## ஸ்ரீ ராம ஜெயம்

கோண்டாவில் கிழக்குப் பதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ வல்லீபுர நாதர் பூதேவி ஸ்ரீதேவி சமேதராக வீற்றிருந்து எமது மக்களின் சகல குறைகளையும் நீக்கி அருள் பாலித்து வரும் எம் பெருமானின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

கோ. நரேந்திரன் ,
தலைவர் , ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் ,
கோண்டாவில் கிழக்கு.

## தேர் உற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்

## தலைவரின் ஆசியுரை

காக்கும் கருணை வள்ளல் ஸ்ரீ நாராயணப் பெருமான் பூதேவி , ஸ்ரீதேவி சமேதராக வல்லீபுர பெருமானாக அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் இவ் ஆலயத்திற்கு தலைவராக இவ்வருடம் இருந்து அவரின் தொண்டுகளை சிறப்பாகச் செய்வதற்கு எம்பெருமானின் திருவருள் கிடைத்தமையையிட்டு மனமகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாலயத்தை வழி நடத்திவரும் ஆலய நித்திய குரு சிவஸ்ரீ ரவீந்திர குமாரக்குருக்கள் , பெரியோர்கள் , எம் பெருமான் அடியவர்கள் , உபயகாரர்கள் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆதரவுடனும் சிறப்பாக நடைபெறுகின்றது. எம்பெருமான் தேரில் இருந்து சகலருக்கும் அருள் பாலிக்க வேண்டும் எனவும் இச் சிறப்பு மலர் சிறப்பாக அமைய வேண்டும் எனவும் எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லீபுர நாதரை வேண்டுகின்றேன்.

ஐ.இராசரத்தினம் , தலைவர் ,
அருள் மிகு ஸ்ரீவல்லீபுர நாதர் தேவஸ்தானம் கோண்டாவில்.


**விஜய் சில்க்**
123,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**ஜீ.எஸ்.லிங்கநாதன் அன் கோ**
பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவஞானம் ஆட்டோ சேவை**
ஒலி ,ஒளி அமைப்பு
ஆஸ்பத்திரி வீதி ,
கோண்டவில் கிழக்கு.
உரிமையாளர் மு.அருமைநாயகம்

**செல்வம் தச்சுத் தொழிலகம்**
ஆலடி வீதி ,
கோண்டாவில் கிழக்கு.
உரிமையாளர் க. கதீஸ்


## செயலாளரின் உள்ளத்திலிருந்து

எமது ஊரின் பொது ஸ்தாபனமாகிய ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானம், ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம் ஆகியவற்றிற்கு செயலாளராக ஒரே காலத்தில் தொண்டு செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளது.

இவ் ஆலயத்தை வளர்த்த பெரியோர்கள் இப்போது ஆலயத்தை வழி நடத்த உதவும் பொதுமக்கள், உபயகாரர்கள், பக்தர்கள், இளைஞர்கள் மற்றும் இச் சிறப்பு மலரை வெளியிடுவதற்கு உதவும் விளம்பரதாரர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் எம் பெருமான் தேரேறி அருள்பாலிக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

தெ. சுகிர்தன் பொதுச்செயலாளர்,
ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்
ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம் ,
கோண்டாவில் கிழக்கு.


**ஆதி பராசக்தி பந்தல் சேவை**
ஆலடி வீதி ,
கோண்டாவில் கிழக்கு.
உரிமையாளர் சி.கனகசிங்கம்.


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வட்டத்துத்தி

Botinical Name - Abutilon indicum
Family-Malvaceae
Engl-Country Mallow
Sinh- Anoda

துத்திச்செடி அல்லது பெருஞ் செடி வகை யைச் சார்ந்தது. இச் செடி சுமார் 1, 1.5 மீற்றர் உயரத்திற்கு ப்ல கிளைகளுடன் நன்கு வளரும். போலியான குச்சிகளில் விருத்தமான சுமார் 5 முதல் 10 சென்ரிமீற்றர் குறுக்களவு உள்ள பெரிய இலைகள் கலக்க இருக்கின்றன. இலை, காம்பு, குச்சி ஆகியவற்றில் வெண்ணிறமுள்ள பஞ்சு போன்ற சிறு சுனைகளதிகம். இலைகளெல்லாம் சிறிது வெண்மை கலந்த பசுமை நிறமுடையதாகவே இருக்கின்றன. இலைகளின் மேல் ஒருவித எண்ணெய்ப்பிசுக்கும், நறுமணமும் இளஞ்செடிகளில் குறைவாகவும் முற்றிய செடிகளில் வளர்ச்சிக்குத் தக்கபட்டி அதிகமாகவும் இருக்கின்றன.

நல்ல மஞ்சள் நிறப்பூக்கள் சுமார் 4 செ.மீ குறுக்களவுள்ள விருத்த வடிவமானது. பூக்களின் நடுவே மகரந்தப்பொடியைத் தாங்கி நிற்கும் மெல்லிய பஞ்சு போன்ற முட்களதிக மிருக்கின்றன.

காய் அழகான, சட்டி போன்ற உருவமுடையது. அடிப்பாகம் பெருத்தும், மேல் பாகம் சிறிது சிறுத்தும் இருக்கின்றன. மெல்லிய கடதாசி போன்ற தோலாலான சுமார் 20, 25 பைகளாலே ஒவ்வொரு காயும் பிணைக்கப்பட்டு அமைந்திருக்கிறது. இப்பையின் ஒருபக்க வரம்பும், முனையும் காயின் வெளிப் புறத்தில் நீட்டிக்கொண்டிருப்பதைக் காணலாம்.

ஒவ்வொரு பையின் வெளிப்புறமும் ஒவ்வொரு வரம்பாகத் தோன்றும். இப்பைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே பிரித்து எடுத்து விடலாம். கருமை நிறமும் ஏலரிசி போன்ற பருமனுள்ள விதைகள் ஒவ்வொரு காயிலும் சுமார் 4 இருக்கின்றன.

இச் செடி பல்லாண்டுகள் வரை உயிர்வாழும்.



### பரம்பலும், பயிரிடுதலும்

யாழ் மாவட்டத்தில் பொதுவாக தரிசு நிலங்கள் எங்கும் தானாக முளைத்து வளரும். எல்லாவகை மண்களிலும் பயிராகும். விதை போட்டு சிறு கன்றுகளை பிடுங்கி மீற்றருக்க ஒன்றாக நட்டு வளர்க்க லாம்.

### மருத்துவப் பயன்கள்

☞ துத்திக்கீரையை ஆய்ந்து பருப்புச் சேர்த்துக் கடைந்து சாதத்துடன் சேர்த்து தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட மூல சம்பந்தமான கோளாறுகள் அகலும்.

☞ மூலத்தில் கடுப்பு ஏற்பட்டு தொந்தரவு கொடுத்தால் துத்தியிலைகளை, சிற்றாமணக்கு எண்ணெய் தடவி தணலில காண்பித்து துவளவதக்கிஅதை ஆசனத்தில் வைத்துக்கட்டிவந்தால் மூலக்கடுப்பு குணமாகும்.

☞ துத்திச் செடியின் பூஇதழ்களை தேவையான அளவு எடுத்து நிழலில் சருகு போல காயவைத்து உரலில் போட்டு இடித்து தூள் செய்து வாயகன்ற சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு ஒரு டம்ளர் அளவு பசும்பாலில தேக்கரண்டி அளவு தூளையும் சிறிது கற்கண்டையும் சேர்த்து நன் றாக கொதிக்க வைத்து இளஞ்சூடாக இருக்கும் போது குடிக்க வாந்தி, குமட்டல் , வாந்தியுடன் சிறிது இரத்தம் வரும் நிலைமை கட்டுப்படும். தேகம் குளிர்ச்சி அடையும் .

☞ இலை அல்லது வேரின் குடிநீரால் வாய்கொப்பளிக்க பல் ஈறுகளி லுண் டாகும் நோய்கள் தீரும்.

☞ இலையை எந்தவகையில் உண்டாலும், வெப்பத்தினால் உண்டாகும் எல்லா நோய்க ளும் தீரும்.

☞ இதன் வேரை அகப்பை போன்று தயாரித்து பசுப்பாலை காய்ச்சிக் கடைய பால் பற்பமாகும்.

இதில் 1–2 கிராம் காலை , மாலை தேனில் அருந்த தேகம் பலம் பெறும்

☞ துத்தியின் வேர்ப்பட்டைகளை உரித்தெடுத்து 40 கிராம் அளவு 400 மி.லி நல்லெண்ணையில் இட்டுக் காய்ச்சி வேர்ப்பட்டை கருஞ்சிவப்பு நிறமடைந்ததும் எண்ணெயை இறக்கி வடிகட்டி முகப் பருக்களுக்கு பூச முகப்பருக்கள் தீரும். இதனை (வதன காந்தித்தைலம்) என்பர்.

☞ இலைகளைக் கொதிக்கிற தண் ணீரில் போட்டு வேகவைத்து அந்நீரில் துணியைத் தோய்த்துப் பிழிந்து ஒற்றிடங்கொடுக்க வலிகள் தீரும்.


குறிப்பு :– இதில் கருத்துத்தி , சிறுதுத்தி, நிலத்துத்தி எனப் பல வகைப் பரம்பல்உண்டு. எல்லா வகைத் துத்திகளின் இலைகளையும் சமைத்து உண்ணலாம்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் , சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம் ,கைதடி.

# சியோல் ஆற்றை 11 நிமிடங்களில் கயிற்றில் கடந்து சீனர் சாதனை

(சியோல்)

தென் கொரியாவின் சியோல் நகரிலுள்ள மூன்றே கால் மைல் நீளமான ஹான் ஆற்றை, அதற்கு மேலாக குறுக்கே கட்டப்பட்டிருந்த கயிற்றில் 11 நிமிடங்களில்' கடந்த சீனாவைச் சேர்ந்த யேக்புஜியாங் மெய்மிதிலி சாதனை படைத்துள்ளார்.



சியோலின் இரண்டாவது சர்வதேச கயிற்றில் நடத்தல் வெற்றிக் கிண்ணப் போட்டியின் போதே அவர் இந்த சாதனையை நிறைவேற்றியுள்ளார்.

இந்த மூன்று நாள் போட்டியில் கலந்து கொண்ட ஏனைய 26 பேருடன் போட்டியிட்டு வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்துடன் 20 ஆயிரம் டொலர் பெறுமதியான பணப் பரிசையும் யேக்புஜியாங் சுவீகரித்துக் கொண்டார்.

இப்போட்டியில் கலந்து கொண்ட கொலம்பியாவைச் சேர்ந்த அலன் மார்ட்டினஸ் 11 நிமிடங்கள் 23 செக்கன்களில் மேற்படி ஆற்றைக் கடந்து இரண்டாமிடத்தை பெற்றுள்ளார்.

கடந்த வருட வெற்றியாளரான சீனாவைச் சேர்ந்த அபுதுஸா தயர்வுஜி யாபுதுல்லா 11 நிமிடங்கள் 28 செக்கன்களில் இந்த ஆற்றைக் கடந்து போட்டியில் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

20 வயதான யேக்புஜியாங் தனது குடும்பபாரம்பரிய கலாசாரத்துக்கு அமைய தனது 7 ஆவது வயதிலேயே கயிற்றில் நடக்கும் பயிற்சியைப் பெற்றுள்ளார்.

இந்த வெற்றி தொடர்பில் மெய்மிதிலி விபரிக்கையில் கயிற்றில் நடந்தபோது நான் மிகவும் பரவசமடைந்தேன் என்று தெரிவித்தார்.

மேற்படி 1.2 அங்குல தடிப்புடைய கயிறானது 69 அடி உயரமுடைய கோபுரங்களில் கட்டப்படிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ–5)

மனிதர்கள் தங்கள் கருத்துக்களையே உறுதி செய்து கொண்டு, இறுமாப்பு அடைந்திருக்கையில், அவர்களின் கருத்துக்களில் பெரும்பாலானவை தவறாயிருக்கும். – ஹியூம்

வலம்புரி

## யார் இறந்தாலும் பேரிழப்பே யுத்த நிறுத்தம் உடன் அமுலாக வேண்டும்

அநுராதபுரத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இருபத்தெட்டுப் பேர் அந்த இடத்திலேயே பலியாகிப் போயினர். எண்பதிற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தென்பகுதியைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பலியானவர்கள் தொடர்பில் பல குடும்பங்கள் கண்ணீர் வடிக்கும் என்பது சர்வ நிச்சயம்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஏற்பட்ட இழப்புக்கள், துயரங்கள் போலவே வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெறும் விமானக் குண்டுத் தாக்குதல் மற்றும் எறிகணை வீச்சினால் ஏற்படுகின்ற மனித உயிரிழப்பில் பல குடும்பங்கள் அழுது புலம்புகின்றன.

எனவே எந்தப் பக்கத்தில் மனித அழிவு ஏற்பட்டாலும் அது துயரத்திற்குரியது என்பதும் அதை மனித நேயம் மிக்க எவரும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதும் தெரிந்த விடயம்.

எனவே மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதும், அதனால் மக்கள் நிம்மதியிழந்து துயரத்தில் வாடுவதுமே இந்த நாட்டின் வழமை என்றாகி விட்டது.

நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் அத்தகையதொரு அனர்த்தத்தில் சிக்க வேண்டிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது? என்ற கேள்வி அவசியமானதாகும்.

அத்தகையதோர் கேள்விக்கான பதில், நாட்டில் நிரந்தரமான அமைதியை-சமாதானத்தை ஏற்படுத்த யார் தவறினார்களோ, யார் அதற்குக் குந்தகம் விளைவித்தார்களோ அவர்களே இத்தகைய அவலங்களை மக்கள் சந்திப்பதற்குக் காரணம் எனத் துணிந்து சொல்ல முடியும்.

இந்த நாடு எமக்கேயுரியது என்ற குறுகிய சிந்தனையில் முளைத்த பேரினவாதப்பேய் நாளுக்கு நாள் மனித உயிர்களைக் காவு கொள்கின்றது.

கௌதம புத்தபிரானின் உயர்ந்த போதனைகள் இருந்தபோதிலும் அவை நடைமுறைப் படுத்தப்படாத ஏட்டிலக்கியங்களாகவே உள்ளன.

மத வழிப்படுத்தலால், சமயக் கல்வியால், உயர் கல்வி அறிவால் பண்பட்ட இலங்கையில் இத்தகையதொரு அவலம் ஏற்படுவது ஒருபோதும் நியாயமாகாது.

எனவே பயங்கரவாதத்தை ஒழிப்போம், வன்னியை மீட்போம் என்ற கூளுரைகளை மாற்றி அழகிய இலங்கைத் திருநாட்டில் அமைதியை ஏற்படுத்துவோம், சமாதானத்தை உருவாக்குவோம்.

எல்லா இன, மத, மொழிகளும் சமத்துவமான உரிமையுடன் வாழ, இலங்கை எங்கள் நாடு என்ற தேச உணர்வைக் கட்டி எழுப்புவோம் என்ற கூளுரையோடு யுத்தத்தை உடன் நிறுத்தி அமைதி வழிக்கு அரசு வந்தாக வேண்டும்.

இல்லையேல் இலங்கையில் நடக்கும் அவலங்கள்–மரணங்கள்–ஓலங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

# சக்தி கொடு தாயே

சிவனுக்குரிய விரதம் சிவராத்திரி. சக்திக்குரிய விரதம் நவராத்திரி. சிவனுக்கு ஒரு நாள் சக்திக்கு ஒன்பது நாள். இதனால் சிவசக்தியின் முதன்மையும், பெருமையும் உணர்த்தப்படுகின்றது. இறைவனை இயக்கி இப்பிரபஞ்சத்தையும் இயக்குபவள் சக்தி, எனவே ஒன்பது நாட்கள் சக்தியைப் போற்றுதல் சாலச் சிறந்தது. "**எங்கெங்கு காணினும் சக்தியடா**" என்று பாரதியார் கூறியது போலவே "**சக்தி பின்னமிலான்**" எனத் திருவருட்பயன் கூறுகின்றது. எனவே சக்தியின் இயக்கமே சர்வமும்.



சக்தியைப் பெண்ணாக உருவகித்து தெய்வமாகப் போற்றி வாழ்வில் சிறப்பும், உயர்வும், வெற்றியும் கண்டவர்கள் தமிழர்கள்.

வாழ்வின் வளத்திற்கு வல்லமைகள் தேவை. அது மனவலிமையாகவும் இருக்கலாம், செல்வச் சிறப்பாகவும் இருக்கலாம். கல்வி நலமாகவும் இருக்கலாம். இம் மூன்றும் ஒருங்கே வாய்க்கப் பெற்றால் வாழ்வில் முதன்மை பெறலாம். இவை மூன்றையும் குறைவின்றிப் பெறுவதற்கு வழிபாடியற்றுவதற்குரிய நாட்களே இந்த ''நவராத்திரி'' நாட்களாகும் நவராத்திரம் என்னும் வடமொழியே தமிழில் மருவி நவராத்திரி என்று தற்காலத்தில் அழைக்கப்படுகின்றது.

இந்த நவராத்திரி விரதம் புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படும். ஒன்பது தினங்களிலே முதல் மூன்று தினங்கள் மலைமகளிற்கும் அடுத்த மூன்று தினங்கள் அலைமகளிற்கும் இறுதி மூன்று தினங்கள் கலைமகளிற்குமாக நோற்கப்படும். ஒன்பதாம் நாள் இரவு ஆயுத பூஜை இடம் பெறும். இதில் ஒவ்வொருவரும் தாம்தாம் பயன்படுத்தும் ஆயுதங்கள் கல்வி சார் உபகரணங்கள் என்பவற்றை வைத்து செய்யும் தொழிலே தெய்வம் எனப் போற்றி வழிபடுவர்.

பிரமத்தை சக்தி ரூபமாக உபாசிப்பது அனாதி காலம் தொட்ட வழக்கமாகும். கடவுளைத் தாயாகத் தியானிப்பதில் நமது மனதிற்குச் சாந்தி உண்டென்பதை மறுக்க முடியாது. மனிதப் பிறவி எடுத்து சதா தவறுகள் புரிந்து வரும் நமது பாவங்களையும் நமக்கு உடலளித்த தாய்மார்களினால் போக்க முடியாது.

சகல ஜீவராசிகளினதும் தாயாரான பராசக்தியினால் தான் இது முடியும . அதனால் தான் அம்பாளை **ஸ்ரீமாதா** என்று விசேடமான பெயர் கொண்டு வழிபடுகின்றோம். தேவியைப் பூஜிப்பது நமக்கு வேண்டிய உபகரிப்புகளைப் பெறுவதற்கேயாம். அம்பிகையை அனுதினமும் அர்ச்சித்தால் ஆனந்தம் அடையப் பெறுவோம்.

கல்விக்கும் கலைகளிற்கும் அதிதேவதை சரஸ்வதியே ஆவாள். கல்வியும், கலைகளும் உள்ளத்திற்கு இன்பம் அளிப்பவை. அழகுணர்ச்சியுடன் கூடியவை. எனவே தான் கலைமகளின் விழாவை பாரதத்திலும், ஈழத்திலும் வாழும் இந்துக்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர். வாழ்க்கை என்பதும் ஓர் கலையே. அதிலும் அழகுக்கு நாம் முதலிடம் கொடுக்க வேண்டும்.

சரஸ் என்றால் நீர் அல்லது ஒளி எனப் பொருள்படும். தங்கு தடையின்றிப் பிரவாகமாகப் பாய்வது சரஸ் என்று சொல்லப்படும். இதனாலே தான் நதிகளுக்கு சரஸ்லதி எனும் பெயர்கள் வழங்கப் பெற்றன. கலைவாணியின் அருள் இருந்தால் வார்த்தைகள் தங்குதடையின்றிப் பிரவாகமாக வெளிப்படும். வாக்கிற்கும், கலைகளிற்கும் இவள் அதிபதி ஆகையினால் நாமகள், **கலைவாணி** எனும் பல்வேறு சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றாள்.

ஏட்டுப் படிப்பிற்கு மாத்திரமன்றி உழவுத்தொழில், கைத்தொழில் முதலிய எல்லாவற்றுக்கும் அருள் செய்பவள் கலைமகள் இதனாலேயே கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களும்

**"நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்**
**தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கருணை**
**ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்**
**ஆடிப் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே"**

எனப் பாடியுள்ளார்.

சுடர் மிகு அறிவு தந்து ஆதாரமாய், அருந்துணையாய் இருக்கும் அன்னை பராசக்தியிடம் மாநிலம் பயனுற வாழ வகை செய்ய வேண்டும் என்று வரம் வேண்டுகிறார் பாரதியார். நாமும் சக்தியிடம் சரணடைந்து சக்தியைப் பெற்று சகல சம்பத்துகளும் பெற்று வாழ்வில் ஒளி பெற்றுயர வரம் வேண்டுவோமாக.

ஸ்ரீ.கோவிதன்
கந்தர் மடம்

# மக்களின் தேவைகளை விரைவில் நிறைவேற்ற பிரதேச செயலகங்கள் முன்வர வேண்டும்

## அமைச்சர் கரு ஜயசூரிய அறிவுரை

(கொழும்பு)

பிரதேச செயலகங்கள் ஊடாக பிறப்பு அத்தாட்சிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொடுக்க எடுக்க வேண்டிய அதிக பட்ச நேரம் பத்து அல்லது பதினைந்த நிமிடங்களேயாகும்.

எனினும் சில பிரதேச செயலகங்களில் பிறபபத்தாட்சிப் பத்திரமொன்றைப் பெறநாட் கணக்கிலும் வாரக் கணக்கிலும் பொது மக்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. இவ்வாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கருஜயசூரிய தெரிவித்தார்.

கல்னேவ பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், அரச அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்களை அமைத்துக் கொடுப்பதால் மட்டும் மக்களுக்கு சிறப்பான சேவையைச் செய்ய முடியாது. பொதுவாக பிரதேச செயலகங்களினூடாக தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள பொதுமக்கள் தினமும வந்து சேருகிறார்கள். அவர்களது தேவைகளை இழுத் தடிக்காமல் வெகு விரைவில் நிறைவு செய்து கொடுக்க வேண்டும். அவர்களுடன் அன்பாகக் கதைத்து பண்புடன் நடந்து கொள்ளவும் வேண்டும் என்றார். (அ-5)

## ஜானக பெரேராவின் படுகொலைக்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டும்

### ஐ.தே.க. அறிவிப்பு

மேஜர் ஜெனரல் ஜனாக பெரேரா படுகொலைச் சம்பவம் தொடர்பான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென ஜக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிற்கு மூன்று பிரிவுகளிட மிருந்து உயிர் அச்சுறுத்தல் காணப்பட்டதாக ஜக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரி வித்துள்ளார்.

அரசாங்கம் விடுதலைப் புலிகள் மற்றும் பிள்ளையான் குழு ஆகியன ஜானக பெரேரவைப் படுகொலை செய்யத் திட்டமிட்டிரு ந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கட்சிக் கிளை அங்குராப் பணவைபவம் குறித்து அறிவிக் கப்படதாகவும் எனினும் ஐந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மட்டுமே அனுப்பிவைக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதக் குழுவொன்றில் அங்கத்துவம் வகித்து ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்பிய பிள்ளையானிற்கு வழங்கப்படும் பாதுகாப்பில் நூறில் ஒரு பகுதிகூட நாட்டுக்காகத்தியாகங்களை மேற்கொண்டு போறாட்டத்தை மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிற்கு வழங்கப்பட வில்லை என திஸ்ஸ அத்த நாயக்க குறிப்பிட்டுள்ளார். எனவே மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் படுகொலைக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு என்பதை திட்டவட்டமாக ஜக்கிய தேசிக் கட்சி அறிவிக்கின்றது. (அ-5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி நம் நடத்தையை மாற்றுவது எப்படி?



உண்மையில் இந்தத் தீய சம்ஸ்காரங்கள் தொடர்ந்து செயல்பட்ட வண்ணமே இருக்கின்றன. அவற்றின் விளைவு தீமையாகத் தான் இருக்கும்; அதன் காரணத்தால் அந்த மனிதன் தீயவனாக இருக்கிறான். அவனால் இதைத் தவிர்க்க முடியாது. இந்த சமஸ்காரங்கள் மொத்தமும் தீய செயல்களை செய்வதற்கான ஆற்றல் மிக்கதொரு தூண்டு சக்தியை அவனுள் உருவாக்கும் தன் சமஸ்காரங்களின் கையில் மனிதன் எந்திரம் போலாகி விடுகிறான். அவை அவனை தீமை செய்யும் படி கட்டாயப்படுத்துகின்றன.

அது போலவே ஒருவன் நல்ல நினைவுகளையே நினைத்து நற்செயல்களையே செய்தால் சமஸ்காரங்களின் மொத்தமும் நல்லதாகவே இருக்கும். இவை அவனது நினைப்பும் முயற்சியும் இல்லாமலேயே அவனை நற்செயல்களில் தூண்டுகின்றன. நல்லது செய்வதில் இருந்து தடுக்க முடியாத மனப்பாங்கு உண்டாகும். அளவிற்கு ஒருவன் மிக அதிகமாக நல்லவற்றைச் செய்வானானால் மிக அதிகமாக நல்லவற்றையே நினைப்பானானால் தன்னையும் மீறி அவன் தீமை செய்ய முயன்றாலும் அவனது மனப்பாங்குகளின் மொத்தமும் சேர்ந்து அவனை தீமை செய்ய விடாமல் தடுத்துவிடும். அவன் முழுக்க முழுக்க நல்ல மனப்பாங்குகளின் ஆதிக்கத்தில் இருக்கிறான். அந்த நிலையில் ஒருமனிதனின் நற்பண்பு நிலை பெற்று விட்டது என்று கூறலாம்.

# எங்கள் மன்னனே ஆட்சி அமைக்க புறப்படுக ! ரஜினி ரசிகர்களின் சுவரொட்டியால் பரபரப்பு

(சேலம்)

எங்கள் மன்னனே ஆட்சி அமைக்க புறப்படு என்ற வாசகம் அடங்கிய ரஜினி ரசிகர் மன்றத்தினரின் சுவரொட்டி சேலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகர் ரஜினி காந்த் அரசியலில் நுழை



யப் போவதாக 1990ஆம் ஆண்டுகளில் பெரிய அளவில் பேசப்பட்டது. 1996ஆம் ஆண் டில் தமிழ் மாநில காங்கிரஸ்தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்த ரஜினி தன்னை நோக்கி வந்த அரசியல் வாய்ப்பை உதறித் தள்ளினார். அந்த வாய்ப்புக்குப் பின் ரஜினி இன்று வரை அரசியலில் நேரடி ஈடு பாடு காட்டவில்லை. அவருக்கு சரியான வாய்ப்பும் ஏற்படவில்லை.

நடிகர் விஜயகாந்த் தே. மு. தி. க கட்சியைத் தொடக்கி எம். எல்.ஏ வாகி தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ளார். நடிகர் சரத்குமாரும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை ஆரம்பித்து நடத்தி வருகிறார்.

ஆந்திராவில்,தெலுங்கு சினிமா சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி பிரஜா ராஜ்யம் கட்சியைப் பிரமாண்டமாகத் தொடக்கி அரசியலில் அடி யெடுத்து வைத்துள்ளார். இப்படியாக நடிகர்கள் பலரும் அரசியல் ஆர்வம் காட்டும் நிலையில் ரஜினி ரசிகர்களுக்கு ரஜினியும் அரசியலுக்கு வரவேண்டும் என்ற ஆசை அவ்வப்போது ஏற்படுவது வாடிக்கையாகி விட்டது. ரஜினி அரசியலுக்கு வரவேண்டும் என வற்புறுத்தியும் வேண்டுகோள் விடுத்தும் அவரது ரசிகர்கள் ஆங்காங்கே சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர். சேலத் திலும் ரஜினியை அரசியலுக்கு வர வற்புறுத்தும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளது.

தளபதியின் படைகள் தயார் . எங்கள் மன்னனே ஆட்சி அமைக்க புறப்படு என்ற வாச கங்களுடன் சேலம் மாநகர ரசிகர் மன்றத்தினர் சார்பில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டி ரசிகர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, கோவை மாவட்ட ரஜினி காந்த் நற்பணி மன்றத்தினர் கோவையில் நேற்று முன்தினம் ஒன்று கூடி புதிய கட்சியைத் துவக்குவது புதிய கொடியை அறி



## தேசிய திராவிட மக்கள் முன்னேற்றக் கழகம்; ரஜனி ரசிகர்கள் கட்சி ஆரம்பம்

முகப்படுத்துவது என முடிவு செய்தனர். நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு தேசிய திராவிட மக்கள் முன்னேற்றக்கழகம் என்ற பெயரில் கட்சி ஆரம்பித்து புதிய கட்சிக் கொடியையும் அறிமுகப்படுத்தினர். சிவப்பு, வெள்ளை, கறுப்பு என மூன்று நிறங்களைக் கொண்டுள்ளது.கட்சிக் கொடி இதன் நடுவில் நீல நிறத்தில் ஒரு நட்சத்திரம் இடம்பெற்றுள்ளது. அதன் நடுவே நடிகர் ரஜினிகாந்தின் உருவம் பதிக்கப்பட்டுள்ளது.

ரஜினி ஆட்சிக்கு வந்தால் மட்டுமே தமிழகத்தில் பொற்கால ஆட்சி அமைக்க முடியும் . கட்சி துவக்குவது புதிய கொடியை அறிமுகப் படுத்துவது பற்றி ரஜினியிடம் அனுமதி பெறவில்லை.

இனிமேல் கோவை மாவட்டத்தில் யாரும் ரஜினி மன்றத்தினராக செயல்படப் போவ தும் இல்லை. ஒரு சுவரொட்டி அடித்தால் கூட கட்சியின் பெயரைப் பயன்படுத்த முடிவு செய் துள்ளோம் இவ்வாறு ரஜனிகாந்த் ரசிகர் நற்பணி மன்றத்தின் துணைச்செயலாளர் அபு தெரிவித்தார். (அ-5)

# தமிழக அரசியல் கட்சிகள் தனித்தனி அணிகளாகப் போராடுவது பயனற்றது

## சரத்குமார் அறிக்கை

(சென்னை)

இலங்கை தமிழர்கள் பிரச்சினையில் தீர்வு ஏற்பட தமிழக அரசியல் கட்சிகள் தனித் தனியாக போராடுவது பயனற்றது என்று சரத்குமார் கூறியுள்ளார்.

இது குறித்து அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி நிறுவன தலைவர் ஆர். சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழினப் போராளிகளை வேரறுப்போம் என்று இலங்கை இராணுவம் தான் நடத் தும் இராணுவத் தாக்குதல்களால் அங்கு வாழ்கின்ற ஒட்டு மொத்த தமிழ் இனத்தையே கருவறுக்க முயலும் படுபாதக செயலுக்கு, மறைமுகமாக இந்திய அரசும் துணை போகிறதோ என்ற வெகுநாளைய சந்தேகம், இந்திய இராணுவ அதிகாரிகள் இருவர் புலிகளின் தாக்குதலில் படுகாயமுற்றனர். என்ற சமீபத்திய நிகழ்வால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கையின் உள் விவகாரங்களில் இராணுவத்தின் அழித்தொழிப்பு நடவடிக்கைக்கு இந்திய அரசு இரகசியமாக உதவி வருவது வெட்ட வெளிச்சமாகி விட்ட நிலை யில் தமிழகத்தில் உள் அரசியல் கட்சிகள் தனித் தனி அணிகளாக போராடுவது பயனற்றது என்பதே எங்கள் கட்சியின் கருத்து.

உடனடியாக தமிழக முதல் - அமைச்சர், மத்திய அரசை நிர்ப்பந்தித்து, இலங்கையில் நடைபெற்று வரும் இராணுவத் தாக்குதல் களை உடனடியாக நிறுத்திடவும் திறந்த மனதோடு, சுமூக பேச்சுவார்த்தைகளை இந்திய அரசே முன்னின்று தொடங்கிடவும், இலங்கை அரசை கடுமையாக வலியுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் நமது தொப்புள் கொடி உறவுகளை காப்பாற் தமிழக முதல் - அமைச்சர் தனது அதிகார ஆசைகளை தவிர்த்தும், அவற்றில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டும், தமிழ் இனம் வாழ களம் இறங்கி போராட முன் வந்தால் அதற்கு சமத்துவ மக்கள் கட்சி துணை நிற்கும்.

அதற்காக அனைத்து அரசியல் கட்சிகளின்ஆதரவையும் திரட்டி களம் இறங்குவேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அறிக்கையில் சரத்குமார் கூறியுள்ளார். (அ-5)

# பட்டினி நிலையும் பாதுகாப்பின்மையும் எம்மை அகதிகளாக வரத் தூண்டின

(இராமேஸ்வரம்)

இலங்கையில் அன்றாட செலவுக்கே வருமானம் இன்றி தமிழர்கள் பட்டினியாக



இருப்பதாக இராமேஸ்வரம் வந்த அகதி கூறினார். இலங்கை வவுனியாவை சேர்ந்த 5 பெண்கள் உட்பட 13 அகதிகள் நேற்று முன்தினம் தங்கச்சிமடம் வந்தனர். ஞாயிற்றுக்கிழமை இரவு தலை மன்னாரிலிருந்து படகில் புறப்பட்ட இவர்கள் நள்ளிரவில் தங்கச் சிமடம் அந்தோனியார் ஆலய கடற்கரையில் வந்திறங்கினர். இரவு முழுவதும் கோயிலில் தங்கியிருந்த இவர்கள் நேற்று முன்தினம் காலை தங்கச்சி மடம் பொலிஸ் நிலையத்துக்கு வந்தனர். இவர்களை பொலிசார் விசாரணை செய்து மண்டபம் முகாம் அனுப்பி வைத்தனர்.

வவுனியாவை சேர்ந்த நம்புமணி (28) கூறுகையில், "இலங்கையில் இராணுவ தாக்குதல் அதிகரித்துள்ளதால் தொழிலுக்கு செல்ல முடியவில்லை. அன்றாட செலவுகளுக்கு வருமானம் இன்றி தமிழர்கள் பட்டினியாக இருக்க வேண்டிய நிலை உள்ளது. பாதுகாப்பும் இல்லாததால் இங்கு அகதியாக வந்தேன்" என்றார்.(ஓ)

## ஈழத்தமிழர் பிரச்சினையில் கருணாநிதியின் போர் குரல்

# 8 கோடி தமிழர்களின் உணர்ச்சிக் குரல்கள் பிரதமருக்கு தந்திகளாக குவியட்டும்

(சென்னை)

ஈழத்தமிழர் பிரச்சினையில் கருணாநிதியின் போர்க்குரல் 8 கோடி தமிழர்களின் உணர்ச்சிக்குரலாய் பிரதமருக்கு தந்திகளாக குவியட்டும் என்று எஸ். ஜெகத்ரட்சகன் கூறியுள்ளார்.

இது குறித்து ஜனநாயக முன்னேற்றக் கழக நிறுவனத்தலைவர் எஸ். ஜெகத்ரட்சகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

**அகதிகளாக தெருவில்....**

நம் அண்டை நாடான இலங்கை சிங்கள பேரின அரசு தம் சொந்த மக்கள் மீது முப்படை தாக்குதலை நடத்திக் கொண்டிருப்பதும் அதை உலக நாடுகள் மௌனமாகவும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதும் அளவு கடந்த அதிர்ச்சியையும், வேதனையையும் தருவதாக உள்ளது.

ஏ9 பாதையை வெகுநாட்களுக்கு முன்பே சிங்கள பேரின அரசு மூடி விட்ட காரணத்தால் தமிழீழ மக்களுக்கு உணவு, உடை போன்ற மிகத் தேவையான பொருட்கள் கூட கிடைக்காத நிலை அங்கு நீடிக்கிறது.

கிளிநொச்சியில் மட்டும் ஏறத்தாழ 3 லட்சம் மக்கள் இப்போது அகதிகளாக தெருக்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பசியோடும் பட்டினியோடும் அந்த மக்கள் போருக்குமுகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உலகிலேயே தன் சொந்த மக்களை பட்டினி போட்டு அவர்களின் மீது பிரங்கித் தாக்குதலை யும் நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரே அரசு இலங்கை பேரினவாத அரசாகத்தான் இருக்க முடியும். மழைக்காலம் தொடங்க இருக்கின்ற இந்த வேளையில் தெருக்களில் வாழும் இலட்சக்கணக்கான மக்களின் நிலையை எண்ணிப்பார்க்கும் போது நம் இதயம் கனக்கிறது.

**தந்திகளாக குவியட்டும்**

இந்த கொடூரமான சூழலில் இலங்கை பேரினவாதஅரசுக்கு ஆதரவுதருவதையும்அவர்களின் இராணுவத்துக்கு பயிற்சி அளிப்பதையும் இந்திய அரசு உடனடியாக நிறுத்தி விட்டு பேச்சு வார்த்தை மூலம் தமிழீழ சிக்கலுக்கு விடிவுகாணத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். நம்தமிழக முதல் - அமைச்சர் கருணாநிதியின் வேண்டுகோளின்படி நம் கட்சியினர் அனைவரும் பிரதமருக்கு தந்திகளை அனுப்புமாறு அன்புடன் வேண்டுகிறேன். நாம் அனைவரும் ஓரணியில் நின்று தமிழீழ விடுதலைக்கு குரல் கொடுக்க வேண்டும்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் முதல் - அமைச் சர் கருணாநிதியின் போர்ககுரல், 8 கோடி தமிழர்களின் உணர்வு, உணர்ச்சிக் குரல் ஆகும். அந்த உணர்ச்சிக்குரல்கள் அனைத்தும் பிரதமருக்கு தந்திகளாக குவியட்டும். தலைநகர் அதிரட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஜெகத்ரட்சகன் கூறியுள்ளார். (அ-5)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சந்திரோதய சனசமூக நிலையத்திற்கும் சந்திரோதய முன்பள்ளிக்கும் பன்முகப்படுத்தப்பட்ட அமைச்சர் நிதியில் இருந்து எமக்கு உதவி அளித்த சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் மாண்புமிகு **கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்.

யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. அ.உதயன் அவர்களுக்கும் உடுப்பிட்டி அமைப்பாளர் திரு. தில்லை நடராஜன் அவர்களுக்கும் உடுப்பிட்டி பொறுப்பாளர் திரு. பிரகாஷ் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

சந்திரோதய ச.ச. நிலையம்
அந்திரான்
கரணவாய் மேற்கு,
கரவெட்டி,

(1824)



# துடுப்பாட்டம், பந்து வீச்சில் ஹமில்ரன் கலக்கல்; சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

ஹமில்ரனின் சகல துறை ஆட்டத்தின் மூலம் 17 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் ஆனது.

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுக்குட்பட்டோருக்கான 50 ஓவர்களைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவான கொக்குவில் இந்துக் கல்லூரி-யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணித் தலைவர் கே.நிரோஜன் முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான எம்.வி.ஹமில்ரன், ஏ.எம்.மனோஜ் ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 86 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது சிறப்பாக ஆடிய ஹமில்ரன் 65 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 30 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஜி.ராகல்சன் ஓட்டம் எதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். தொடர்ந்து எம்.டி.சஜீந்திரன் களமிறங்க மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஏ.எம்.மனோஜ் 32 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய எஸ்.மிலான்டோ 5, அணித் தலைவர் பி.நவதீபன் 8, ஜி.ஜெகன் ரெஜினாஸ் 1, ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 118 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் தொடர்ந்து களமிறங்கிய எஸ்.ஜே.சஞ்சீவராஜ், சஜிந்திரனுடன் இணைந்து நிதானமாக ஆடி ஓட்டங்களை எடுத்தார். இந்த ஜோடி 25 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது எஸ்.ஜே.சஞ்சீவராஜ் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஆர்.ஜே.ஜெப்பெர்ஷன் 3 ஓட்டங்களுடனும் ஜெரி 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய எம்.டி.சஜீந்திரன் 28 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 48.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 172 ஓட்டங்களை எடுத்தது.



இதில் ஆட்டமிழக்காமல் ஏ.கோகுலன் 4 ஓட்டங்களை எடுத்ததுடன் உதிரிகளாக 44 ஓட்டங்களைக் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வழங்கியது.

பந்து வீச்சில் சிறப்பாக வீசிய ஆர்.பவித்திரன் 9.3 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 7 விக்கெட்டுக்களையும் என்.கார்த்திக் 8 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் அணித் தலைவர் கே.நிரோஜன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 173 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு எஸ்.கோபிகன், எஸ்.மயூரன் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

எனினும் இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 31 ஓட்டங்களை எடுத்தபோது எஸ்.மயூரன் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய கே.ஜனுதாஸ் நிதானமாக ஆடினார். எனினும் ஜனுதாஸும் 10 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய எஸ்.ஜனுகுலன் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் சிறப்பாக ஆடிய எஸ்.கோபிகன் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் கே.நிரோஜன் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். எனினும் மறுமுனையில் எஸ்.ஜனுகுலன் 5 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்தடுத்து விக்கெட்டுக்களையிழந்த கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 63 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய எஸ்.உத்தமக்குமரன் சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுத்தார். மறுமுனையில் நிதானமாக ஆடிய அணித் தலைவர் கே.நிரோஜன் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 5-வது விக்கெட்டுக்காக எஸ்.உத்தமக்குமரனுடன் ஜோடி சேர்ந்த எஸ்.சாம்பவன் நிதானமாக ஆடினார். இந்த ஜோடி இணைப்பாட்டமாக 18 ஓட்டங்களை எடுத்தபோது எஸ்.சாம்பவன் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஆர்.பவித்திரன் களமிறங்க மறுமுனையில் சிறப்பாக ஆடிய எஸ்.உத்தமக்குமரன் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஆர்.பவித்திரன் 3, பி.பவிராஜ் 7, என்.கார்த்திக் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க கொக்குவில் இந்துக் கல்லூரி 43.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 122 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் எம்.வி.ஹமில்ரன் 10 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 16 ஓட்டங்களைக் கொடுத்து 5விக்கெட்டுக்களையும் எஸ்.மிலான்டோ 7 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் மற்றும் எம்.டி.சஜீந்திரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் 17 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.சென்.பற்றிக் கல்லூரி அணி யாழ்.மாவட்ட சம்பியனானது.

தோல்வியடைந்த கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இடத்தைப் பெற்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனான சகல துறைகளிலும் ஜொலித்த யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் எம்.வி.ஹமில்ரனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் எஸ்.கோபிகனும் சிறந்த பந்து வீச்சாளராக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் ஆர்.பவித்திரனும் சிறந்த களத் தடுப்பாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் எஸ்.கே.சஞ்சீவராஜும் தெரிவானார்கள்.

இச் சுற்றுத் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் கே.கபிலனும் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக மகாஜனாக் கல்லூரியின் எஸ்.திலக்சனும் தெரிவானார்கள். (05)

# கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்.மாவட்ட சம்பியனானது



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 13வயதுக்குட்டோருக்கு கடந்த 2007 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 2007 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 13 வயதுக்குட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது.

இப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனானது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் எல்.ஆதித்தன் தெரிவானார்.

அவரே சிறந்த துடுப்பாட்ட வீரர், களத் தடுப்பாளர் விருதையும் பெற்றார். இத் தொடரில் சிறந்த பந்து வீச்சாளராக யாழ்.இந்துக் கல்லூரியின் எஸ்.லக்ஷன் தெரிவானார்.

இச் சுற்றுப் போட்டிக்கான விருது வென்றவர்கள் மற்றும் வெற்றி பெற்ற அணிக்கான கோப்பை, நேற்று சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான 2008 ஆம் ஆண்டு சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் வைத்தே யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடருடன் ஓய்வு பெறுவதாக கங்குலி அறிவிப்பு

(பெங்களூர்)

சௌரவ் கங்குலியின் 16 ஆண்டு கால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிபுக்கு வருகின்றது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருடன் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக கங்குலி அதிரடியாக அறிவித்துள்ளார்.

இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் நாளை பெங்களூரில் ஆரம்பமாகவுள்ளது. இத் தொடருக்கான இந்திய அணியின் தேர்வின்போது கங்குலி இடம்பெறுவாரா என்ற சந்தேகம் எழுந்தது.

ஆனாலும் சிறிகாந் தலைமையிலான புதிய தேர்வுக் குழு இவர் மீது நம்பிக்கை வைத்தது. முதல் இரண்டு டெஸ்ட் போட்டிக்கான அணியில் வாய்ப்பளித்தது.

டெஸ்ட் தொடருடன் ஓய்வு பெற்று விட வேண்டும் என்று இவருடன் தேர்வுக் குழு இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டதாகக் கூறப்பட்டது. இதனைக் கங்குலி மறுத்தார்.

### திடீர் அறிவிப்பு

இந்தச் சூழலில் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடருடன் ஓய்வு பெறுவதாக நேற்றுக் கங்குலி அறிவித்தார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில்,

அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடருக்குப் பின்னர் டெஸ்ட் அரங்கிலிருந்து ஓய்வு பெறப் போகின்றேன். இதுவே என்னுடைய கடைசி டெஸ்ட் தொடராக இருக்கும். ஓய்வு குறித்து ஏற்கனவே அணி வீரர்களிடம் தெரிவித்துள்ளேன். எனவே என்னுடைய கடைசி டெஸ்ட் தொடரை வெற்றியுடன் முடிக்க விரும்புகின்றேன்.

கிரிக்கெட்டில் எனக்கு ஒத்துழைப்புத் தந்த அனைத்து வீரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு கங்குலி தெரிவித்தார்.

### வெற்றிகரமான அணித் தலைவர்

1972 ஆம் ஆண்டு கொல்கத்தாவில் பிறந்த கங் குலி 1992 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக தனது சர்வதேச ஒரு நாள் போட்டியில் காலடி வைத்தார். ஒரு நாள் போட்டியில் விறுவிறு என முன்னேற்றம் கண்ட இவர், லோட்சில் கடந்த 1996 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதன்முதலில் அறிமுகம் ஆனார்.

இப் போட்டியில் சதம் அடித்துத் தேர்வாளர்களை வியப்படைய வைத்தார். ஒரு நாள் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்கள், 100 விக்கெட், 100 பிடி எடுத்த வீரர்கள் வரிசையில் இலங்கை ஜெயசூரியா, இந்தியாவின் டெண்டுல்கரைத் தொடர்ந்து பெங்கால் டைகர் கங்குலி இடம்பிடித்தார்.

## குண்டுத் தாக்குதல்...

ஆலோசகர் இலங்கை துணைத் தூதரை அழைத்து, இது தொடர்பிலான இந்திய கவலைகளை வெளியிட்டது குறித்து, நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் கருத்துக் கூறியுள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர், இந்தியாவுடன் நெருக்கமான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது என்ற கொள்கையை இலங்கை தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்றும் கூறியுள்ளார்.

· மோதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக உள்ளூரிலும் தேசிய மட்டத்திலும் பல அமைப்புகளின் உதவிகள் மற்றும் கண்காணிப்புகளுடன் உரிய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுத்து வருவதாகவும் போகொல்லாகம கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் நலன் உட்பட, இலங்கையைப் பற்றி கரிசினை கொண்டுள்ள அனைவரும், விடுதலைப் புலிகளை ஓரங்கட்டுதல் என்பது மிகவும் சரியான ஒரு நடவடிக்கை என்பதை வலியுறுத்த வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் இலங்கைத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## வடக்கு -கிழக்கு...

முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினராக நேற்று நாடாளுமன்றத்தில் சபாநாயகர் முன்னிலையில் பதவியேற்றதையடுத்து ஆற்றிய உரையின் போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் இந்தப் பதவியை எனக்குத் தந்தமைக்கு ஜனாதிபதிக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். இப்பதவி எனக்கு மட்டும் வழங்கப்பட்டதொன்றாக நான் கருதவில்லை. தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி வழங்கியுள்ள கௌரவத்தையே இப்பதவி பிரதிபலிக்கிறது.

கடந்த காலங்களில் நடந்த கசப்பான சம்பவங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளார்.

இதற்கமைய கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்தின மக்களும் சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய சூழ்நிலையை ஜனாதிபதி ஏற்படுத்தியுள்ளார் என்றும் கூறினார்.

இதேவேளை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டு அங்கு மாகாண சபை நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு சிறந்த முறையில் முன்னேற்றம் கண்டு வருகிறது.

யுத்தம் காரணமாக கடந்த இரண்டு தசாப்தங்களாக கிழக்கில் எவ்வித அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஏனைய கட்சிகளும் சர்வ தேச சமூகமும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஜனாதிபதியின் அடுத்த கட்ட நடவடிக்கையான வடக்கை மீட்கும் பணிகள் தற்போது முன்னேற்றம் கண்டு வருகிறது. மிகவும் பலவீனமான நிலையில் புலிகள் இருப்பதால் கிளிநொச்சி நகரம் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் கைப்பற்றப்படும் நிலைமை காணப்படுகிறது.

சர்வதேச சமூகங்கள் தலையிட்டு புலிகளுக்கு அழுத்தங்களைக் கொடுத்து அங்கு மக்களை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றார். (ச-5)

## கருணாவின்...

திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைதிரிபால சிறிசேன, கருணா, சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார மற்றும் தேர்தல் ஆணையாளர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் மாதம் 6ம் திகதி 1570/6 என்ற வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானதென இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கலாசார சீரழிவுகளில் ஈடுபடாது இருக்குமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது நிலவும் கலாசாரச் சீரழிவுகளை ரெலோ அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்த செய்திக்குறிப்பில், யாழ்ப்பாணத்தில் சில இளைஞர்கள் கலை, கலாசாரப் பண்பாடுகளை மீறும் வகையில் செயற்பட்டு வருவதுடன் பொதுமக்களுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

வீதிகளில், சந்திகளில் நின்று கலாசாரப் பிறழ்வு நடவடிக்கையில் ஈடுபடுவோர் அவற்றைக் கைவிட்டு தமக்கும் ஏனையவர்களுக்கும் நல்லதைச் செய்ய முற்படுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

· இத்தகைய விருப்பத்தகாத செயல்களில் எவரையும் ஈடுபடவேண்டாம் எனவும் அந்த அமைப்பு கேட்டுள்ளது. (எ-1)

## தமிழர்கள் மீதான தாக்குதலை...

நிற்பது வரவேற்கத்தக்கது. இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து விவரிக்க முடியாத கொடுமைகளுக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

அந்த அரசே அவர்கள் மீது யுத்தத்தை தொடுத்து விமானங்கள் மூலமாகவும் தரை வழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகி இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்து பொருட்கள் கூட கிடைக்க வழியில்லை.

இந்த நிலையில் தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழகம் தழுவிய அளவில் சர்வ கட்சிகளுடன் இணைந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது. இந்த பிரச்சினை தமிழகம் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல. இது ஒரு அகில இந்திய பிரச்சினை. எனவே மத்திய அரசு இதில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு தனது கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும். இதற்கு அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை மட்டும் போதாது, அரசு மட்டத்திலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.

பிரதமர் மன்மோகன் சிங் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமெரிக்க அதிபர் புஷ் உடன் பேசி வருகிறார்.

அதேபோல இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த அந்நாட்டுப் பிரதமருடன் பேச வேண்டும். இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதுடன் இந்திய மீனவர்களும் அந்நாட்டு கடற்படையால் சுடப்படுகிறார்கள். இலங்கையில் போரால் பாதிக்கப்படும் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வருகிறார்கள்.

இந்த பிரச்சினைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்க பிரதமர் மன்மோகன் சிங்கும், வெளியுறவுத் துறை அமைச்சரும் தலையிட வேண்டும். கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றார் டி.ராஜா. (ச-5)

# இந்திய அரசு ஒத்துழைத்தால்...

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி பேசியதாவது,

இலங்கையில் காந்தியடிகளைப் போன்ற உருவம், ஆனால் பெரியாரைப் போன்ற உள்ளம் கொண்ட செல்வா தொடங்கியது தான் உரிமைப் போராட்டம். அதற்கான ஆதரவு கேட்டு தமிழகத்துக்கு வந்தார். இங்கு வந்த போது அவரோடு அமிர்தலிங்கமும் வந்தார். இவர்கள் எல்லாம் இன்று இல்லை. இவர்கள் இல்லாமல் போனதற்கான காரணங்களை நான் ஆராய விரும்பவுமில்லை. அதற்காக இப்போது கண்ணீர் விட்டு புண்ணியமும் இல்லை.

செல்வா காலத்துக்குப் பிறகு அங்கு இளைஞர்கள் தோன்றினார்கள். அந்த இளைஞர்கள் தான் சிறைச்சாலையிலே உயிர் நீத்தார்கள். அப்படிப்பட்டவர்களுடைய தியாகம் அவர்கள் நினைத்த விடுதலை உணர்வு இன்றளவும் பட்டுப்போகாமல் இலங்கையில் இருக்கிறது.

ஆனால் முழு விடுதலைதான் வேண்டுமா? இலங்கையில் இருந்து தனி ஈழம் பிரிந்துதான் தீரவேண்டுமா? இது விவாதத்துக்குரிய விடயம். நெடுநாளாக விவாதிக்கப்படுகிறது. இதற்கிடையில் எத்தனையோ சமாதானக் குழுக்கள் வந்துள்ளன. நோர்வே உள்ளிட்ட பல நாடுகள், அறிவாளிகள், சமரசத் தூதுவர்கள், சமரசம் செய்யவந்த நாடுகள் என அத்தனை பேரும் முயற்சித்தும் கூட அங்கே இன்னமும் சமரசம் ஏற்படவில்லை.

ஒருவேளை தமிழனின் இரத்தம் முழுவதும் இலங்கைத் தீவிலே அபிஷேகிக்கப்பட்டால்தான், அதற்குப் பிறகுதான் சமரசம் வரும் என்ற செடி இலங்கையிலே முளைக்குமோ என்னவோ எனக்குத் தெரியவில்லை.

அத்தகைய இரத்த அபிஷேகம் நடைபெறாமலேயே அங்கே புரட்சிப்பூ, புதுமைப்பூ, ஜனநாயகப்பூ, விடுதலைப்பூ, மறுமலர்ச்சிப்பூ, உரிமைப்பூ, தமிழர்களின் வாழ்வுப்பூ அங்கே பூக்கவேண்டும் என்பதுதான் எனது ஆசை, தி.மு.கவின் கருத்துமாகும்.

அந்தக் கருத்தை வெற்றி பெறச் செய்ய இந்தியாவிலே இருக்கின்ற தலைவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற தலைவர்கள் எல்லாம் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளத்தான் இந்தப் பொதுக் கூட்டத்தில் வேண்டுகோளாக விடுக்கிறேன்.

இந்த ஒருவிடயத்திலாவது சாகிற தமிழனை காப்பாற்றுகின்ற விடயத்திலாவது நாம் எல்லோரும் ஒன்றுபட்டு இருப்போம் நமக்குள்ளே சச்சரவுகள் தேவையில்லை. நாம் ஒன்றுபட்ட நிலையிலேயே இந்தப் பிரச்சினையை அணுகுவோம். எந்தக் கசப்புகளும் எந்த மன வேறுபாடுகளும் இல்லாமல் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

உள்ளத்தால் ஒருவரே, வெள்ளம்போல் தமிழர் கூட்டம் என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவி வரிகளை நிறைவேற்றும் நாளை நான் எதிர்பார்க்கிறேன். அந்த நாள் உருவாக வேண்டும் என்றுதான் நான் தவம் இருக்கிறேன்.

அந்தத் தவம் பலிக்க வேண்டும். அது இதுவரையிலும் பலிக்காவிட்டாலும் கூட ஈழத் தமிழர் பிரச்சினையிலாவது அந்தத் தவம் பலித்து அனைவரும் தமிழர்கள்தான் தமிழர்களுக்கு ஒரு தீங்கு வந்தால் எல்லோரும் கேடயங்களாக இருந்து அந்தத் தீங்கைத் தாக்குவோம். அந்தப் பகையை வெல்லுவோம் என்ற உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்கள் ஒரே உணர்வோடு இந்தப் பிரச்சினையை நோக்குகிறார்கள் என்ற மன ஆறுதல் ஏற்பட்டுள்ளது. நேற்று நான் அந்தச் செய்தியை வெளியிட்டவுடன் இங்கிலாந்து நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரேந்திர சர்மான் இந்தச் செய்தியை இன்டர்நெற், பத்திரிகை செய்தியைப் பார்த்துவிட்டு எனக்கு கடிதம் எழுதியுள்ளார்.

வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையும் எனக்குக் கடிதம் எழுதியுள்ளது. இலங்கை எம்.பி சேனாதிராஜாவும் கடிதம் எழுதியுள்ளார். வெளிநாட்டில் இருக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடிதம் எழுதி என்னை துணை நில்லுங்கள் என்று சொல்கிறார்கள் என்றால் அந்த என்னை என்பதற்கு கருணாநிதி மட்டுமல்ல தமிழ் சமுதாயத்தை, தமிழர்களை, தமிழகத்திலுள்ள பல்வேறு கட்சித் தலைவர்களை, தமிழர்களுக்காக இயக்கம் நடத்துகின்ற அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

தனி ஒருவனாக நின்று இந்தக் காரியத்தை சாதிக்க முடியும் என்று நான் சொன்னால் என்னைவிட இறுமாப்பு உள்ளவன் யாரும் இருக்க முடியாது. ஆகவே தமிழர்கள் அனைவரும் ஒரே உருவில், ஒரே வடிவில், ஒரே உணர்வில் நின்று இந்த ஆபத்துக்கு விடை காண்போம்.

இந்திய அரசு ஒத்துழைக்கும் என்று நம்புவோம். நம்பினால் நாம் வெற்றிபெறுவோம். அவர்கள் ஒத்துழைத்தால் நமக்கு வாழ்வுண்டு. ஒத்துழைக்காவிட்டால் இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்ல, இங்குள்ள தமிழர்களும் அடியோடு சாவோம்.

இதைத்தவிர வேறு எதையும் சொல்ல விரும்பவில்லை. இந்தக் கூட்டத்தோடு இந்தப் போராட்டம் முடிபதல்ல. நமக்கு நடிது குரல் இத்தோடு நிற்பதல்ல, வேறு வழி யோசிப்போம். பொதுக் குழுவில் இதுபற்றி யோசித்து முடிபு எடுப்போம். அதற்கு வழியில்லாமல் இளகிய மனம் படைத்த பிரதமரும், அதைவிட இளகிய மனம் படைத்த சோனியா காந்தியும் இலங்கைத் தமிழர்கள் மீது காட்டுகின்ற கருணையை, அன்பை, பாசத்தை, மனித நேயத்தை இலங்கைத் தமிழர்களுக்கும் மட்டுமல்ல உலகமெங்கும் உள்ள மனிதர்களிடம் காட்டவேண்டிய மனித நேயத்தை இலங்கைத் தமிழர்கள் மீதும் காட்டுவார்கள் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன் என்றார் அவர். (ச-5)


யோகா நிலையம்
YOGA CENTRE



யோகா நிலையம் எதிர்வரும் வியாழக்கிழமை (09.10.2008) பகல் 11.30 -12.30 வரை உள்ள சுப முகூர்த்த வேளையில் குடாநாட்டு மக்களின் நன்மை கருதி இல.532, பலாலி வீதி, (இலங்கை வங்கி அருகாமையில்) திருநெல்வேலியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பயிற்சி நேரங்கள்:
சனி, ஞாயிறு காலை 06 மணி தொடக்கம் 8 மணிவரை
மாலை 4.30 மணி தொடக்கம் 6 மணிவரை
(வார நாட்களில் காலையில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது நேரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்)

NOTE:- இவ் யோகா கலைப் பயிற்சியினை பெறுவதன் மூலம் ஆஸ்மா, நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் மற்றும் சகலவிதமான உடல் நோய்களுக்கும் ஏற்றால்போல் வேறுபட்ட யோகாசனங்கள் வழங்குவதன் மூலம் கொடிய நோய்களில் இருந்து விடுபட முடியும்.

தொடர்புகளுக்கு:
யோகா சிரோமணி
கு.கேதீஸ்வரன் (M. phil)
T.P. No:- 021 222 2316
0775590492

முகவரி:
இல.532, பலாலி வீதி,
(இலங்கை வங்கி அருகாமை)
திருநெல்வேலி.
(1825)



324, Palaly Road, Jaffna. MCSE 2008
சர்வதேச தொழிற்சந்தையில் அதிக வாய்ப்புக்களை கொண்டுள்ள
தகவல் தொழில்நுட்ப கணினிப்பொறியியலாளர் கற்கை நெறி
Networking
Microsoft
Certified System Engineer
MCSE 2008
நிறுவனத்தின் சர்வதேச தர சான்றிதழ்
MCSE 2008
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
★ Network Manager, System Administrator தொழில் வாய்ப்புக்கள்
★ சான்றிதழ் மூலம் வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
50% கற்கை கட்டண சலுகை
MCSE
நீங்களும் குறுகிய காலத்தில் சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்.



மேலதிக விபரங்களிற்கு MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.